முரசொலி

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு: ௬ | 30-10-59 வெள்ளி — ஒலி: 27

"ஸ்ரீ என்பதை திரு—என்று மாற்றுவது பைத்தியக்காரத்தனம். திருவாரூர் என்ற பெயரை ஸ்ரீவாரூர் என்றால் எப்படி இருக்கும்?" —என்று கனம் பக்தவத்சலம் அவர்கள் குடந்தையில் கேட்டார்கள்.

56. பிரஞ்சுப் புரட்சி!

அன்புள்ள மாதவி,

வால்டேர், ரூசோ, பெய்ன் ஆகியோரின் எழுத்துக்கள் மக்கள் மனத்திலே — குறிப்பாக பிரஞ்சுக்காரர்களின் மனத்திலே —ஒரு மாபெரும் எண்ணப் புரட்சியைத் தோற்றுவித்திருந்தது. 'சிந்திக்கும் ஆற்றலையும் மக்கள் பெற்று, பொருளாதாரச் சீர்குலைவும் ஒரு நாட்டிலே ஏற்படுமானால், அந்த நாடு புரட்சிக்குத் தயாராகி விட்டதாகவே கருதலாம். வால்டேர், ரூசோ போன்றோரின் வாதத் திறமையும், கருத்துச் செறிவு நிறைந்த இலக்கியப் படைப்புக்களும் பிரஞ்சு மக்களை சிந்திக்க வைத்தன. பதினான்காம் லூயி, பதினைந்தாம் லூயி, கடைசியாக பதினாறும் லூயி ஆகிய பிரஞ்சு மன்னர்கள், தங்களின் ஆடம்பர வாழ்க்கையாலும், கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள நடத்திய அர்த்தமற்ற போர்களாலும் அரசாங்க கஜானாவைக் காலியாக்கி வைத்திருந்தனர். மன்னர்களின் மதோன்மத்தப் போக்கால் பிரஞ்சு நிர்வாக இயந்திரம் ஊழல்களின் சிகரத்தை எட்டிப் பிடித்திருந்தது. அதிருப்தியடைந்த மக்கள், ஆக்ஞையிடும் ஆளையும், புரட்சி செய்வதற்கான நாளையும் எதிர்பார்த்து ஆவலோடு காத்திருந்தனர்.

அப்பொழுது பிரஞ்சு நாட்டை ஆண்டு கொண்டிருந்தவன் பதினாறும் லூயி. ஆணவத்தின் அவதாரம் அவன்! அவன் மனைவி மேரியோ, பணத்தைத் தெய்வமாக பூஜித்தவள்; ஆடம்பரத்தை ஒரு கலையாகவே பயின்றவள்! மக்கள் வாடினாலும் வதங்கினாலும் தான் அனுபவிக்கும் கோடி கோடி இன்பங்களில் ஒன்றுகூடக் குறையக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தவள்.

கடமையுணரா மன்னனுக்கு மடமை நிரம்பிய மேரி மனைவியாகவும் வாய்த்தது, பிரஞ்சு வரலாற்றில் சுவை மிக்கச் சேதி! மேரியும் லூயியும் வாழ்ந்த பொறுப்பற்ற வாழ்க்கை ஒரு நாட்டின் செல்வ நிலையையே பாதிக்கும் அளவு இருந்ததென்றால் அதைப்பற்றி அதிகமாக விவரிப்பானேன்? இந்த நிலைக்கு அரசி மேரிதான் காரணமென்பதை உணர்ந்த மக்கள் அவளைக் குறிப்பிடும் போதெல்லாம், "திருமதி பற்றாக்குறை" என்றே கேலிப் பெயரிட்டு அழைக்கலாயினர்.

அரசாங்க கஜானா காலியாகவே மன்னனின் கவலையெல்லாம் எப்படிப் பணம் திரட்டுவது என்பதிலே சென்றது. பணம் எதற்கு என்று நினைக்கிறாய்? நாட்டை ஆளவா? கோட்டை கொத்தளங்களைச் செப்பனிடவா? வயல்களுக்கு வரப்புக் கட்டவா? வாய்க்கால்களுக்கெல்லாம் கரை போடவா? பூமிக்கு எருப் போடவா? மக்களுக்கு வாழ்க்கை வசதிகள் செய்து தரவா? அதுதான் இல்லை. மன்னன் பணம் திரட்ட எண்ணியதெல்லாம் விருந்து நடத்த; கேளிக்கையாட; மங்கையரை அழகுபடுத்தி, மது மயக்கத்தில் அவர்களோடு மகிழ்ந்திருக்க!

பதினாறும் லூயி ஆட்சிபீடம் ஏறிய நாளிலிருந்தே, பிரஞ்சு நாட்டில் பட்டினிப் பட்டாளம், ஆங்காங்கே உணவு கேட்டுக் கலகம் செய்தபடிதான் இருந்தது. விவசாயிகளும் அவ்வப்பொழுது புரட்சிக் கொடியை உயர்த்திக் கொண்டுதான் இருந்தனர். ஒருசமயம், உணவில்லாத காரணத்தால் குடியானவர்கள் அணிவகுத்து ஆளவந்தார்களின் மாளிகை நோக்கிச் சென்று, பஞ்சம் தீர வழியொன்று வகுக்குமாறு கேட்க, அங்கிருந்த கவர்னர், பிறருக்கு வாழ்வளித்து தாங்கள் தவித்த அந்த மக்களைப் பார்த்துச் சொன்னான்: "என்னருமைத் தோழர்களே! பசிக்கிறதா? ஏன் பயப்படுகிறீர்கள்? வயல் வெளியைப் பாருங்கள். புல் புதர்போல் மண்டிக் கிடக்கிறது. அதைப் புசித்து மகிழுங்கள்!"

அதிகார போதையிலே, ஆணவம் குரலெழுப்பி ஆர்ப்பரித்தது! புல்லைத் தின்னும்படி உபதேசிக்கப்பட்ட மக்கள், ஆட்டு மந்தைபோல்தான் திரும்பினார்கள். ஆனால் அவர்களுடைய உள்ளத்தில் குமுறி நின்ற உணர்ச்சிகள், சீக்கிரமே அந்த செம்மறியாட்டுக் கூட்டத்தை சீறிப் பாய்ந்திடும் புலிகளாக்கி விடும் என்ற உண்மையை, அன்றைய பிரஞ்சு மன்னனும் அவனுடைய எடுபிடிகளும் உணரவில்லை. வரலாறு உணர்த்தும் வரை காத்திருந்தனர். அந்த உண்மையை உணர அவர்கள் கொடுத்த விலையோ...!

பதினாறும் லூயியின் ஆட்சியில் பிரஞ்சு நாடே ஒரு பெரிய பிச்சைக்கார விடுதியாக இருந்தது என்று சொல்வது மிகையல்ல; உண்மையின் படப்பிடிப்பு! 1777—ம் ஆண்டு, பிரஞ்சு நாட்டில் பதினோரு லட்சம் பிச்சைக்காரர்கள் இருந்ததாக அரசாங்கக் கணக்கே ஒப்புக்கொள்ளுகிறது. அரசாங்கத்தின் கவனத்துக்கு வரும் வகையில் பிச்சைக்காரர்களாகத் திரிந்தவர்கள் இவர்கள். வெளியே சொன்னால் வெட்கம் எனப் பயந்து, வீட்டுக்குள்ளேயே அடங்கிக் கிடந்த கௌரவப் பிச்சைக்காரர்கள் எத்தனை லட்சமோ! எந்த நாட்டிலும் இந்த நிலை வெகுகாலம் நீடிக்க முடியாது. வால்டேரின் எழுத்தோவியங்களால் தெளிவு பெற்ற மக்கள், சுதந்திரம்—சமத்துவம்—சகோதரத்வம் என்ற உரிமையுணர்ச்சியை ரூசோவிடமிருந்து கற்றுக்கொண்ட மக்கள், ஆடுகளாய் மாடுகளாய் வாழ்ந்து, ஆமைபோல் அரசாங்க ஆணைகளுக்கு அஞ்சி ஒடுங்கி விடுவார்கள் என எப்படி எதிர்பார்க்க முடியும்? தவிர, அரசனின் அதிகாரம் இங்கிலாந்தில் தவிடு பொடியானதை சமீபத்தில்தான் அவர்கள் பார்த்திருக்கிறார்கள். அமெரிக்கா சுதந்திரப்போரில் பங்கு பெற்றுத் திரும்பிய பிரஞ்சுக்காரர்கள் புதிய சுதந்திர எண்ணங்களுடன் தாயகத்துக்குத் திரும்பி வந்திருந்தார்கள்.

விழிப்புற்ற ஒரு சமுதாயத்தை வீணர்கள் மனம்போனபடி ஆட்சிசெய்ய முயன்றனர். முடிவு?

குமுறிக்கொண்டிருந்த எரிமலை ஒரு நாள் வெடித்து, அக்கினிக் குழம்பை வாரி வீசியது! உலக வரலாறு இதுவரை கண்டிராத ஒரு பயங்கரப் புரட்சி—மக்கள் புரட்சி — பிரஞ்சுமண்ணில் தோன்றியது.

கலகக்காரர்கள் ஆரம்பத்தில் அராஜக வேலைகளில் ஈடுபடவில்லை. நியாயமான இரண்டு கோரிக்கைகளை மன்னனிடம் வற்புறுத்தினர். பணம் வேண்டியிருந்ததால் மன்னன் வரி விதித்தான். யார்மீது? பணக்காரர்கள் மீதா? அதுதான் இல்லை! ஏழைமக்கள்மீது ஏராளமான வரிகள் போட்டான். பிரபுக்கள், செல்வந்தர்கள், மதகுருமார்கள் வரிகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டனர். இந்த நிலை ஏன் என்று கேட்ட மக்கள் விசாரணையின்றி, பாரீஸ் நகரின் பயங்கரச் சிறையான பாஸ்டில்லி சிறையில் அடைக்கப்பட்டனர். வேதனைக்குள்ளான மக்கள் வெகுண்டெழுந்து, மன்னர் பார்லிமெண்டைக் கூட்ட வேண்டுமென்று கோரினர். வசதி படைத்தோருக்கு வரி விலக்கு கூடாதென்றும், ஏழை மக்கள் தண்டிக்கப்படுமுன் எதிர்த்து வாதிட்டுத் தங்களின் கட்சியை எடுத்துச் சொல்லும் உரிமை வேண்டுமென்றும் கேட்டனர். மக்களின் எழுச்சி கண்டு பயந்த மன்னன் பார்லிமெண்டைக் கூட்டினான். ஆனால் மக்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கும் நல்லெண்ணமோ, அவற்றை நிறைவேற்றும் நோக்கமோ அவனுக்குக் கிஞ்சித்தும் இல்லை. மாறாக மக்களை அடக்க வெளிநாடுகளிலிருந்து படை தருவிக்கும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தான். இதையறிந்த கிளர்ச்சிக்காரர்கள் கிளர்ச்சியைப் பலப்படுத்தினர். மன்னன் பார்லிமெண்டைக் கலைத்துவிட்டதாக அறிவித்தான். பார்லிமெண்ட் கலைய மறுத்தது. பார்லிமெண்ட் உறுப்பினர்களை மன்னன் பலாத்காரமாக வெளியேற்றினான். வெளியேற்றப்பட்ட அவர்கள் அருகிலிருந்த டென்னிஸ் விளையாட்டு மைதானத்தில் கூடி, பிரஞ்சு நாட்டுக்கான அரசியல் சட்ட அமைப்பை வகுத்தனர். மன்னனோ படைத் தலைவர்களுடன், மக்களை அடக்குவதற்காக, மந்திராலோசனை நடத்திக்கொண்டிருந்தான்.

பட்டினி கிடந்த மக்களுக்குத் தாங்கள் போகும் பாதை சரியா என்பதை சிந்திக்க அவகாசமோ, மனநிலையோ இருக்க நியாயமில்லை. பாரிஸ் நகரில் பயங்கரமான மக்கள் கிளர்ச்சி தோன்றியது.

1789-ஆம் ஆண்டு, ஜூலை 14-ஆம் நாள், பிரஞ்சு வரலாற்றில் மட்டுமல்ல; உலக வரலாற்றிலேயே ஒரு ஒப்பற்ற நாள். அன்றுதான் கொடுமைகளின் தாயகமாக விளங்கிய பாஸ்டில்லி சிறைக் கதவுகள் கலகக்காரர்களால் உடைத்தெறியப்பட்டன. அதிலிருந்து கைதிகள் விடுவிக்கப்பட்டார்கள். அவர்களும் கலகக்காரர்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.

பாரிஸ் கலகத்தையறிந்த பிரஞ்சுக்காரர்கள் நாடெங்கும் புரட்சிக் கொடியை உயர்த்தினர். மன்னன், முதலில் கலகத்தை அலட்சியப்படுத்தினான். மக்களின் சக்தியைக் குறைத்து மதிப்பிட்டான். கூலிப் பட்டாளம் தன்னையும் தன் குடும்பத்தையும் காப்பாற்றிவிடும் எனக் கோட்டை கட்டினான். இந்த அசட்டுத் துணிச்சல் இல்லாமலிருந்திருந்தால், பாஸ்டில்லி சிறை உடைக்கப்படுவதற்கு முதல் நாளிரவு, பாரிஸ் நகருக்கு அருகிலுள்ள வெர்சேல்ஸ் மாளிகையில பிரபுக்களோடு விருந்தில் ஈடுபட்டுக் காமக் களியாட்டங்களில் மன்னன் மூழ்கியிருந்திருக்கமாட்டான்!

மக்களின் குரலுக்கு மன்னன் பணிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆகவே பணிந்தான் என்பதே பொருந்தும். திரைமறைவில் கலகக்காரர்களை அழிக்கத் திட்டம் தீட்டினான். குமுறிக் கொண்டிருக்கும் எரிமலையை குடம் தண்ணீரால் அணைத்துவிட எண்ணிய அவனுடைய பேதமையால் பிரான்ஸ் எந்நிலை அடைந்தது? லூயி மன்னனும் அரசி மேரியும் என்ன ஆனார்கள்? 'பிரஞ்சுப் புரட்சி' எப்படிப்பட்ட பயங்கரப் பாதையில் திசை திரும்பியது? அறிய ஆவலாய் இருப்பாய். விவரம் அடுத்த மடங்கலில்.

அன்புள்ள,

அகத்தியன்.

மரணதைரியம் வாழ்க!

உலக அதிசயங்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது! ஆச்சரியம் புகாத உள்ளங்களில் ஆச்சரியத்தைப் புகுத்திவிட்டனர் நம் அமைச்சர்கள்! அப்படி யென்ன சாதித்தார்கள்?

டில்லி எஜமானர்களின் பீடத்தை நோக்கி ஒரு எதிர்ப்புப் பெருமூச்சு விட்டிருக்கிறார்கள்.

'நிறுத்தலளவையோடு முகத்தலளவை வேண்டுமா? வடநாட்டில் இருப்பதுபோல் எல்லாவற்றையும் நிறுத்துவிடலாமே?'—என்று கேட்டது டில்லி.

'வேண்டாம். நாங்கள் மரக்கால், படி, ஆழாக்கு—என்ற முகத்தலளவையைப் பயன்படுத்திக்கொள்கிறோம்!'-என்று துணிந்து, மரண தைரியத்தோடு டில்லிக்கு அறிவித்துவிட்டார்கள். நம் மாநில அரசு!

'உனக்கு வேறு அளவை: எனக்கு வேறு அளவை இருக்கட்டும்'என்று கூறியவர்களே! வடநாட்டை நோக்கி, 'உனக்கு வேறு அரசு எனக்கு வேறு அரசு இருக்கட்டும்'—எனக் கூறும் நாள் எந்நாளோ?

வெள்ளி 30—10—59 சென்னை

பிழை வேண்டாம்!

நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற பொருளாதாரச் சீர்குலைவைப் போக்க ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் வகையற்றுக் கிடக்கின்றனரே—என்கிற குரல் எங்குமே எழும்பிக் கொண்டிருந்தது!

அழுது இளைத்தவர்கள்—உழுது ஓடானவர்கள், "எங்களது உழைப்பும், கொட்டிய உதிரமும்—முதலாளிகளின் வாளிப்பான உடலுக்குப் புது வனப்பைச் சேர்க்கத்தானே பயன்படுகிறது! எங்கள் வாழ்வுப் பாதையிலே மண்டிக் கிடக்கும் கள்ளிக்களான்களை அகற்றுவார் இல்லையே!" என்று குமுறி எழுகின்ற ஏழையர் தம் ஏக்கப் புலம்பல் நாட்டிலே ஒரே ஒரு கேள்வியை மட்டும் எழுப்பிவிட்டது! செல்வத்தில் பெரும் பகுதி தனிப்பட்ட முதலாளிகளின் இரும்புப் பெட்டிக்குள்ளே சரணடைவதில் நாட்டுக்கு என்ன லாபம்? அதன் முன்னேற்றத்திற்கு என்ன பலன்?

பொருள் மிகுதியாக இருப்போரிடம் மீண்டும் பணம் குவிகின்ற நிலையால் பணத்தட்டுப்பாடுதானே ஏற்படுகிறது? முடங்கி வருகின்ற அந்தத் தொகைதான் பிறவி எடுத்ததின் பயனையே நாட்டுக்குச் செய்ய முடியாது பாழாகி விடுகிறதே! அத்தகைய பெரும் பொருள் அரசாங்கத்தின் கையில் இருந்தால், ஆக்க வேலைகள் எதற்காவது முதலீடு செய்யும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளலாமல்லவா?

அரசியலார் இப்படி நினைத்தார்களோ என்னவோ; தொழில்—வணிகத் துறையில் தங்களது வரம்பை உயர்த்திக் கொள்ளவேண்டுமென முடிவு செய்தார்கள். அப்போதைக்கப்போது பொருளாதார விற்பன்னர்கள் தருகின்ற ஆலோசனையின்படி, சர்க்கார் அநேக தொழிலகங்களைத் தனது நேரடியான நிர்வாகத்தின் கீழே கொண்டு வந்தது. இந்தச் செயலில் சர்க்கார் வளர்கிறது என்றாலும், இப்போதைய வளர்ச்சிக்கு 'ஆமையின் வேக'த்தைத்தான் நாம் உதாரணமாகக் கூற முடியும்.

1947-ம் ஆண்டில் அரசின் நேரடியான நிர்வாகத்தின் கீழ் இருந்த நிறுவனங்கள் 20. அவற்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த தொகை ரூ. 42·55 கோடி. ஆனால் 1959—ம் ஆண்டு துவக்கத்தில் கணக்குப்படி சர்க்காரின் கீழ் இருக்கிற தொழிலகங்களின் எண்ணிக்கை 97. முதலீட்டுத் தொகையும் ரூ. 691 38 கோடியாக உயர்ந்திருக்கிறது. பனிரெண்டு ஆண்டுகளில் அரசின் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை ஐந்து மடங்காகவும், முதலீட்டுத் தொகை பதினெட்டு மடங்காகவும் அதிகரித்திருக்கிறது!

காலமெல்லாம் அட்டைபோல் நாட்டு மக்களின் இரத்தத்தை உறிஞ்சிப் பழக்கப்பட்ட உப்பரிகைவாசிகள் — பரம்பரை முதலாளிகள்—அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையைக் கண்டு சீறுகிறார்கள்: நாளைக்கு, தெருவிலே திரிகின்ற நடமாடும் கடைகளையும், அங்காடிக் கூடைகளையும் சர்க்கார் அபகரித்துக் கொண்டு விடுமே என்று கேலியும் பேசுகிறார்கள்.

இத்தகைய இடர்பாடுகள் — இடுக்கண்கள் ஏற்பட்டாலும், அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளினால் நாம் எதிர்பார்க்கிற பலன் இரண்டு உண்டு. ஒன்று, பணத்திமிங்கிலங்களின் பல் பிடுங்கப்படுகிறது; மற்றது தொழில் துறையில் கிடைக்கிற பெரும் லாபத் தொகையை வேறு செயல்களில் ஈடுபடுத்தமுடியும்!

இந்த இரண்டையும் அரசியலார் ஒழுங்காகச் செய்திருக்கிறார்களா என்று கவனிக்கிற நேரத்தில்தான் வேதனையின் வயப்பட்டுவிடுகிறோம். அரசினர் தயாரிக்கின்ற பொருட்களில் தரக் குறைவு மிகுந்திருக்கிறது. அதுபோல் நிர்வாகத் துறையிலும் ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. அப்போதைக்கப்போது கிடைக்கின்ற அறிக்கைகளின்படி, சர்க்காரிடம் மிகுந்து கிடக்கிற குறைபாடுகள், தனிப்பட்ட முதலாளிகளின் கிண்டலுக்கு இலக்காகிறது; நாட்டு மக்களின் நம்பிக்கையின்மைக்குப் பாதை அமைத்துக் கொடுக்கிறது.

இந்த நிலையில்தான், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இன்னும் ஏராளமான தொழிலகங்களைத் தம் கைக்குள் கொண்டு வருவது குறித்து திட்டக் குழுவினர் முடிவு செய்திருக்கின்றனர். மத்திய அரசின் நிர்வாகச் சக்கரத்தின் அடியில் இன்னும் எத்தனை நிறுவனங்கள் மிதியுண்டு நசுக்குண்டு அவதியுறப் போகின்றனவோ; நாமறியோம்!

இந்நிலையில் சென்னை அரசினரும் தனியார் லாப வேட்டைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் செயல் ஒன்றில் இப்போது ஈடுபட்டிருக்கின்றனர். அதற்குப் பலமான எதிர்ப்பு இன்று திரும்பும் திசையெல்லாம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தக் கல்வி ஆண்டில் சில ஆரம்பப்பள்ளி வகுப்பிற்கான பாடப் புத்தகங்களை சர்க்காரே வெளியிடப் போவதாகச் செய்தி வந்திருக்கிறது!

சர்க்காரின் இந்த விசித்திரமான ஈடுபாடு விபரீதத்திற்கு வரவேற்பளிக்கும் என்பது மட்டும் உறுதி!

இன்று சர்க்கார் தம்முடைய நேரடியான நிர்வாகத்திற்குக் கொண்டு வர துறைகளா இல்லை? தனிநபர்கள் கொள்ளை கொள்ளையாகக் குவிப்பதைத் தடுக்க மார்க்கமா இல்லை?

பஸ் போக்குவரத்தைத் தேசீய மயமாக்க வேண்டும் என்கிற வேண்டுகோள் இன்று நேற்று ஏற்பட்டதில்லையே! கோடி கோடியாக லாபம் குவிக்கிற அந்தத் துறை, முதலாளிகளின் கையிலேயே இருக்கட்டும் என்று விரும்புகிறது சர்க்கார்! காரணம் என்ன? அறிஞர் அண்ணாகூட சட்டமன்றத்திலே அந்த யோசனையை வலியுறுத்தினார்; ஆனால் அமைச்சர்களின் உள்ளத்திலே ஊடுருவிப் பார்த்தால் நன்கு தெரியும், அதைத் தேசீய மயமாக்கி காங்கிரசை வளர்க்கின்ற பண முதலைகளின் எதிரியாகத் தாங்கள் மாற விரும்பவில்லை என்பது!

கனம் அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள், "சினிமாக் கொட்டகைகளை சர்க்கார் எடுத்துக்கொள்ள அண்ணாத்துரை அனுமதிப்பாரா?" என்று கேட்டார். துணிவிருந்தால், அந்தத் துறையை—லாபகரமான தொழிலை எடுத்து நடத்துவதில் தவறில்லை! அதைத்தான் அறிஞர் அண்ணா அவர்களும் குறிப்பிட்டார்கள்!

ஆனால், இத்தகைய வழி வகைகளை எல்லாம் விட்டுவிட்டு பள்ளிப் புத்தகங்களைப் பிரசுரிக்க சர்க்கார் ஓடி வருவானேன்? மற்ற துறைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகக் குறைந்த லாபமே தரக்கூடிய இந்தத் துறை எப்படித்தான் சர்க்காரை ஈர்த்தது?

பள்ளிமாணவர்களின் மனதிலே பதிவது எதுவும் பசுமரத்தாணியாகும். இன்றைய தினம் ஆளும் திறனற்றது சர்க்கார் என்ற உண்மை, அத்தகைய பிஞ்சு நெஞ்சங்களில் பதியவிடக் கூடாது! ஆகவேதான் "ஜனகனமண அதிநாயக ஜயகே" என்று துவங்கி, "கதர் வாழ்க! காந்தீயம் வாழ்க!" என்று புத்தகத்தை முடிக்க விரும்புகிறது சர்க்கார்!

இப்போது சர்க்காரின் விதிகளுக்கிணங்க தனிப்பட்டவர்கள் புத்தகங்கள் வெளியிடுகிறார்கள்; அதை சர்க்கார் அமைத்திருக்கிற புத்தகக் குழுவே பரிசீலிக்கிறது; நூற்றுக்கணக்கான புத்தகங்களுக்கிடையே ஒன்றிரண்டு புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கிறது. ஆகவே, அப்படி பரிசீலித்துப் பொறுக்குவதன்மூலம் நல்ல புத்தகங்கள் கிடைக்க முடிகிறது. வெளியீட்டுக்காரர்கள் தமது நூலை தேர்வு பெற வேண்டும் என்ற எண்ணத்தால் தரமான நூற்களை—அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு வெளியிடுகிறார்கள். இந்தப் போட்டி மனப்பான்மை மாணவர்களுக்கு நன்மையைத்தான் தருகிறது.

ஆனால், சர்க்காரே ஏகபோக அதிகாரத்துடன் அத் தொழிலை மேற்கொண்டால் போட்டிக்கு அங்கே இடமில்லை; ஆட்சி பீடத்திலிருப்போர் கருத்துக்கு மாற்றுக்கருத்துத் தரவே வழியில்லை. அவர்களது விருப்பத்திற்கு எந்தவிதமான தடையுமில்லை; ஆகவே நல்ல புத்தகங்கள் தயாரிக்கப்படும் என்பதற்கும் உறுதியில்லை!

இப்போது பள்ளி இறுதித் தேர்வுக்கான பாட நூற்களை சர்க்காரே வெளியிட்டு வருகிறது. இந்தச் சிறிய முயற்சியிலேயே ஏராளமான ஊழல்கள் தலைவிரித்தாடுகின்றன. பள்ளிகள் திறந்து இரண்டு மூன்று மாதங்கள்வரைகூட மாணவர்களுக்கு ஒழுங்காகப் பாட நூற்கள் கிடைக்கச் செய்வதில்லை. வெளியிடுகிற நூற்களிலும் ஏராளமான பிழைகள் மலிந்து கிடக்கின்றன. கடந்த இரண்டு மூன்று வருட காலமாக வெளிவருகின்ற பள்ளி இறுதித் தேர்வுக்கான தமிழ்ப் பாட நூலில் மிகுந்து கிடக்கின்ற பிழைகளை நாம் எடுத்துச் சொல்லி வருகிறோம்.

அந்தக் குறைபாடே இன்னும் தீரவில்லை; இந்த நேரத்தில் பள்ளியில் நுழைகின்ற பாலகர்களிடம் சர்க்கார் கை வைப்பது யோசிக்க வேண்டிய ஒன்றுதான்!

அப்படித்தான் செய்வோம் என்று அரசினர் பிடிவாதமாக இருந்தால், குறைகள் ஏதும் இல்லாது பார்த்துக் கொள்வோம் என்றாவது உறுதி தர வேண்டும்—செய்வார்களா?

கை.

சிறுகதை

கோடையின் வெப்பத்தை கடற்கரையிலே கொஞ்சம் தணித்துக் கொள்ள, தேன்கூட்டிலே ஒட்டிக் கொண்டிருக்கும் ஈக்கள் போல நிரம்பி வழிந்த அந்த மக்கட் கூட்டத்தில் எழுத்தாளன் ராமுவும் ஒருவன்!

கலையும் தரித்திரமும் வெளிச்சமும் நிழலும்போல என்றாலும், ராமு இப்போதுதான் கொஞ்சங் கொஞ்சமாக வெளிச்சத்தின் உதவியால் நிழலை விரட்டிக் கொண்டிருந்தான்.

அவன் எழுத்துக்கு மக்கள் மன்றத்திலே நல்ல செல்வாக்கு உண்டு. அவன் எழுதிய புத்தகங்களை வெளியிட பதிப்பாளர்கள் போட்டி போட்டுக் கொண்டனர். அவன் எழுதிய நாடகமென்றால் துவக்க நாளன்றே நூறாவது நாடகத்தன்று யாரைத் தலைவராகப் போடலாம்—என்ற விவாதம் துவங்கிவிடும்!

நூறு வயது வாழும் மனிதர்களைக்கூட சுலபமாகப் பார்த்துவிடலாம்; ஆனால் நூறு நாட்கள் ஓடுகிற நாடகங்களைப் பார்ப்பது சுலபமா? ஆனால் ராமுவைப் பொறுத்தவரையில் அது அவனுக்கு வாடிக்கையாகி விட்டது!

ராமு அடுத்த நாடகத்துக்குத் திட்டமிட்டுக் கொண்டிருந்த அந்த நேரத்தில்தான், "வணக்கம், அய்யா!"—என்ற குரல் கேட்டுத் திரும்பினான்.

"உம்மை எனக்குத் தெரியவில்லையே?"

"நான் வயிற்றுக்கு இல்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறேன். தொழில் கிடைக்கவில்லை."

"உனக்கு என்ன தொழில் தெரியும்?"

"நான் ஒரு நடிகன்!"

"அதுதான் இப்போது என்னிடம் நடித்துக் காட்டுகிறாயா?"

"இல்லை, இல்லை! நீங்கள் வேண்டுமானால் என் வீட்டிற்கு வந்து பாருங்கள். என் பிள்ளை குட்டிகள் தரித்திரத்தால் தவிக்கிறார்கள்!"

ராமு சிறிது நேரம் யோசித்தான். "அதெல்லாம் ஒன்றும் வேண்டாம்! இப்போது நான் எழுதிக் கொண்டிருக்கும் நாடகம் என்னைப் போல ஒரு ஏழை எழுத்தாளனை மையமாகக் கொண்டது. அதில் கதாநாயகன் வேடம் உனக்கு மெத்தப் பொருத்தமாக இருக்கும்! வா, என்னுடன்! உம்.... உன் பெயர் என்ன?"

"சந்திரன்!"

"சந்திரா — வா, வா!"

—இருவரும் புறப்பட்டார்கள்.

❊

"ஏழை எழுத்தாளன்" நாடகத்தை அரங்கேற்றப் போகும் கம்பெனி முதலாளியிடம் ராமு சந்திரனை அறிமுகம் செய்து வைத்தான். "இவர்தான் அந்தக் கதாநாயகன் வேடத்தைப் போட வேண்டும்!" என்று உறுதியாகச் சொன்னான்!

பெருத்த செலவில் நாடகத்தை நடத்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறவர் கதாநாயகனாக முன்பின் தெரியாத ஒருவனைப் போடுவதற்குச் சம்மதிப்பாரா?

கலை உலகம் எப்படிப்பட்டது என்பதுதான் எல்லோருக்கும் தெரிந்த ரகசியமாயிற்றே! பாதையோரத்திலே அழகு ரோஜாச் செடி சாண் உயரம் வளர்ந்திருக்கும்; அதை ஏதோ காட்டுச் செடி என்று காலடியிலே போட்டு மிதித்துச் செல்வர். அதைவிபரம் தெரிந்த வேறொருவன் எடுத்துச் சென்று கண்காணித்து வளர்த்து, அதில் பூத்திருக்கும் ரோஜாமலருக்கு எந்த அழகியின் வதனமும் ஈடாக முடியாது என்று காட்டிய பிறகுதான், முன்பு அலட்சியம் செய்தவர்கள் தங்களது மந்த புத்தியை நொந்து ஏங்குவர்! ஆக; இதில் எந்த மலர் பூக்கும் என்று முன்பே உணர்ந்து ஆக்கமளிப்பவர் ஒருவகை; மணம் வீசத் துவங்கிய பிறகே நுகர வருபவர் இன்னொருவகை. கலையூர் இப்படித்தான் இரண்டு விதமாகக் காட்சியளிக்கிறது.

ராமு சந்திரனைக் காட்டி இது காட்டு ரோஜா அல்ல; பனி தூங்கும் பட்டு ரோஜா என்று நாடக முதலாளிக்கு எவ்வளவோ முறை எடுத்தெடுத்துச் சொன்னான். அவரோ கேட்டதாக இல்லை.

உடனே ராமு கையிலிருக்கும் பணத்தைக் கணக்குப் பார்த்தான். எந்தெந்தப் பொருளுக்கு மார்வாடி பணம் கொடுப்பானோ அதையெல்லாம் அடகு வைத்துப் பணமாக்கினான்.

"சந்திரா! இந்த முதலை வைத்துக்கொண்டு உன் நாடகக் கம்பெனியை ஏற்படுத்து. அதில் 'ஏழை எழுத்தாளன்'—அரங்கேறட்டும்!"

— ராமுவின் உதவியோடும் வாழ்த்தோடும் 'ஏழை எழுத்தாளன்' துவங்கிற்று!

❊

வெள்ளம்போலத் திரண்டிருந்த மக்கள் வெள்ளம் சந்திரன் உதிர்த்த ஒவ்வொரு வசனத்திற்கும் கையொலி கிளப்பிற்று. "இவனன்றோ பிறவி நடிகன்"— என்று புகழ்ந்துரைக்காதவர்கள் நாடகத்தைப் பார்க்காதவர்கள்தான்!

வெள்ளி விழா, பொன் விழா, வைர விழா — 'ஏழை எழுத்தாளன்' நாடகம் எல்லா விழாக்களையும் காணும் வாய்ப்புப் பெற்றது! இதற்குமேல் நாடகம் ஓடினால் அதற்கு எந்த விழா என்று பெயரிடுவது — என சந்திரன் நினைத்துக் கொண்டிருக்கும் நேரத்திலே....

ராமு கண்களில் வழியும் கண்ணீரைத் தடுப்பதற்கு வழியறியாது தவித்துக் கொண்டிருந்தான்.

ஏன்?

ஏற வேண்டிய இடத்திற்கு ஏறிவிட்ட பிறகு ஏணியின் உதவி எதற்காக? உதைத்தெறிந்து விட்டான், சந்திரன்! அன்றைய 'கடற்கரைக் காட்சியை' அவன் கனவிலும் நினைத்துப் பார்க்கவில்லை.

சந்திரனைத் தேடிவந்த புகழ் ராமுவை மறக்கச் செய்தது.

அந்த நேரம்தான் 'ஏழை எழுத்தாளன்' நாடகம் இருநூறாவது முறையாக என்றும் இல்லாத விதத்தில் சிறப்போடு நடத்தப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் அந்த விழாவில் எல்லாப் பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள், ராமுவைத் தவிர!

அன்று நாடகம் வேறு எந்த நாளையும்விட மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது.

நல்ல உணர்ச்சி மயமான கட்டம். எழுத்தாளனை ஏமாற்றிப் பிழைக்கும் ஒரு அயோக்கியனைக் கதாநாயகன் தட்டிக் கேட்கும் காட்சி.

திடீரென்று அதிர்வேட்டு போன்ற சப்தம் எல்லோரையும் ஆட்டி வைத்தது.

மேடையிலே வீராவேசமாக முழங்கிக் கொண்டிருந்த சந்திரன், 'அய்யோ' — என்று கீழே சாய்ந்தான்!

வேறு ஒன்றுமில்லை; மேடைக்கு எதிரே வைக்கப்பட்டிருந்த ஆயிரம் வாட் மின்சார பல்பு சற்றும் எதிர்பாராத விதத்திலே வெடித்து, சந்திரன் முகத்திலே சிதறிவிட்டது.

* * *

எந்த முகத்தை தரிசிப்பதற்காகக் காசு கொடுத்து மக்கள் கூட்டம்கூட்டமாக வந்தார்களோ அந்த அழகு முகம் இப்போது அவலட்சணமாக மாறிவிட்டது!

சந்திரனுக்கு இனி வருமானம் இல்லை — என்கிற நிலை! முகம்தான் அவனுக்கு முதல். அது போய்விட்ட பிறகு வியாபாரம் எப்படி நடக்கும்?

பழமிருந்தால்தானே பறவைகள் வரும்? சந்திரன் தனிமரமானான்!

❊

நாட்கள் ஓடின. இப்போதெல்லாம் நாடகம் எழுதும் துறையையே துறந்து விட்ட ராமு கடற்கரையில் அவருக்கென்றே பிரத்யேகமாக ஒதுக்கப்பட்ட இடத்தில் உட்கார்ந்து ஏதோ சிந்தனையில் அமர்ந்திருந்தார்.

அவருக்கு எதிரில் யாரோ வருவது கண்ட அவர் அந்தப் பக்கம் திரும்பினார்.

ஒரு கன்னங் கறுத்த உருவம் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தது. ராமு தெரிந்து கொண்டார், அது சந்திரன்தான் என்று!

சந்திரனுக்கு அவரது முகத்தைப் பார்க்கும் துணிவு வரவில்லை; அவரைக் கண்ட மாத்திரத்தில் அதிர்ச்சியோடு ஓடிவிட்டான்.

❊

ஒரு வாரத்திற்குப் பின் சந்திரனுக்கு ஒரு பார்சலும், அதோடு ஒரு கடிதமும் வந்தது.

அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது! இதுதான்:

"அன்புள்ள சந்திரன்!

நீ என்னைப் பார்க்க முடியாத நிலையில் இருப்பதை நான் உணர்ந்துகொண்டேன். இத்துடன் இருக்கும் பார்சலில் நான் புதிதாக எழுதியிருக்கும் நாடகம் இருக்கிறது. நடிப்பதற்கு அழகுத் தோற்றம் இல்லையே— என்று கவலைப்படாதே. அவலட்சண சொரூபன்தான் என் கதாநாயகன்.

நாடக ஆரம்பச் செலவுக்காக இத்துடன் ஐநூறு ரூபாய்க்கான 'டிராப்டை'யும் அனுப்பியுள்ளேன்."

❊

—ராமுவின் கையொப்பமிட்ட இந்தக் கடிதத்தை சந்திரன் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

அன்றுதான் பிரபல நாடகாசிரியர் ராமுவின் "அவலட்சண அழகன்" நாடகத் துவக்கம்!

பல ஆண்டுகளுக்குப் பிறகு ராமு எழுதிய முதல் நாடகம்; அதில் அவர் ஒரு புதிய பாத்திரத்தை உருவாக்கியிருக்கிறார்— இரண்டும் சேர்ந்து நாடகத்திற்கு ஒரு பரபரப்பான விளம்பரத்தைத் தந்தது!

அன்று கொட்டகை நிரம்பி வழிந்தது.

தீயினால் முகம் கருகியவனுக்கும் இருதயம் உண்டு என்பதை அருமையாக விளக்கி, அவன சமுதாயத்தில் மற்றவர்களைப் போல உலவுவதற்கு என்னென்ன துயரங்களை ஏற்கிறான் —என்பதை ஆசிரியர் அழகாக விளக்கியிருந்தார்.

அன்று நாடக முடிவில் சந்திரன் மேடையில் தோன்றி எழுத்தாளன் ராமுவை என்னவெல்லாமோ சொல்லிப் புகழ்ந்தான். கடுமையான காய்ச்சல் காரணமாக அவர் வர முடியாமற் போனதற்கு மிகவும் வருத்தப்பட்டான்.

[தொடர்ச்சி பக்கம்—12]

வீதியிலே பாலோட வேண்டாம்; விழியிலும் நீரோட வேண்டாம்!

பாலுக்குப் பாலகன் அழுது நிற்கையிலே, திருமாலுக்குத் தங்கையாம்—தீயேந்திக் கூத்தாடும் கைலைச் சிவனுக்குத் தாரமாம் பார்வதி வந்தாள்; பாலகனுக்குப் பால் தந்தாள்—என்று புராணத்திலே படிக்கிறோம்.

பாம்புப் படுக்கையிலே, தேம்பி அழுததேவரின் துயர் துடைத்த நாராயணன், நாரதர் கீதம் இசைக்க, நம்பியோரைக் கைவிடும் திருமகள் கால் அமுக்கப் படுத்திருக்கிறான், பாற்கடலில்—என்று பாகவதம் கூறும்.

பால் படாத பாடுபட்டது புராணீகர் கையிலே! பால் இருக்குமிடம் தெரிவதில்லை சென்னையிலே! குளக்கரையில் நின்றழுத சிறுவனுக்கு பால் தந்தாள்; பசி தீர்த்தாள் ஒருத்தி—இது புராணம் கூறுகிறது.

கடல் ஓதுங்கும் கரையிலே நின்றழுகிறார்கள் சென்னைவாழ் மக்கள் பாலுக்காக! அவர்களைப் பார்த்து பரிவு கொள்வாரில்லை; பசி தீர்ப்பாருமில்லை — இது நடைமுறை கூறும் நிகழ்ச்சி.

ஏனிந்த நகரத்தில் மாத்திரம் பால் கிடைப்பதில் தளர்ச்சி? சிந்திப்பாரில்லை; சிந்தித்தாலும் சர்க்காருக்குச் சொல்வாரில்லை.

பால்—என்ற பொருளின் முழு உருவத்தைப் பார்த்தவரில்லை, பால் கறப்பவனைத் தவிர! பால் வீடு வந்து சேரும்போது நீருக்கும் அதற்கும் வேற்றுமையில்லை, வெண்மை நிறத்தைத் தவிர! ஏனிந்த அநியாயம் செய்கிறார்கள், மாட்டை நம்பிப் பிழைப்பவர்கள்? —என்று நமக்குக் கேட்கத் தோன்றும். அவர்கள் தான் என்ன செய்வார்கள்? பருத்திக்கொட்டைக்கும் பிண்ணாக்கிற்கும் விலையேற்றமதிகமாகிவிட்டதால் இவர்கள் பாலின் விலையை உயர்த்தாது, பாலின் அளவை அதிகமாக்குகிறார்கள்!

ஏன் இழி நிலைமை? பருத்திக் கொட்டைக்கும் பிண்ணாக்கிற்கும் விலை எப்படி ஏறிற்று? சொல்லித் தெரிய வேண்டியதில்லை இது. இந்தக் காங்கிரசார் ஆட்சியோ கள்ள மார்க்கெட்காரர்களின் ஆட்சி! எனவே மக்களின் உணவுப் பொருட்கள் எங்கோ ஓடி ஒளிகின்றன. விலைவாசிகள் எட்டாத் தூரத்திற்கு ஓடுகிறது. மக்கள் சலித்த மனத்தோடு, மந்திரிகளின் உபதேசத்தோடு மாடுகளின் உணவைத் தின்ன ஓடுகிறார்கள்! மாட்டு உணவின் விலை ஏறுகிறது! பாலில் நீரும் அதிகமாகிறது! ஆகவே மாடுகளால் வயிறு வளர்ப்போரின்மீது முழுப் பழியையும் போடாதீர்கள்; 'இரட்டைக் காளை' மாடுகளால் வயிறு வளர்ப்போர்தான் இந்தப் பழியை முழுதும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள்.

சென்னை நகரிலே வாழும் மக்களுக்குக் கலப்பில்லாத பால் கிடைக்க வழியில்லை. இருந்தும் அரசாங்கத்தின் பெயரால் இருக்கிறது ஒரு பால் பண்ணை! பெயர், மாதவரம் பால் பண்ணை. அங்கிருக்கும் மாடுகளின் எண்ணிக்கை, 500 கறவை மாடுகள்! இவை போதுமா? சென்னை வாழ் மக்களின் தேவைக்கு? போதாது! போதாது!!

இன்றைக்கு மக்களின் தேவை 1,60,000 பவுண்டுகள். இது ஒரு நாளைக்கான தேவை.

நூற்றுக்கு 60 பேர் பால்—எனும் பொருளை டீ, காப்பி மூலம் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இந்த அளவு தேவையென்றால், மேலை நாடுகளைப்போல் பாலையே உண்ணும் நல்ல வழக்கம் வருமானால் எவ்வளவு தேவை?

ஏழை எளியவர்களின் கைக்கு எட்டாத உயரத்தில் இருக்கும் போதே இந்த அளவு தேவையென்றால், அவனும் குடிக்குமளவு பால் மலிவுவிலையில் கிடைக்குமானால், எவ்வளவு தேவைப்படும்?

அதற்கான திட்டமிருக்கிறதா இவர்களிடம்? இல்லை.

பாலுக்கு என்னய்யா அவசியம் வந்துவிட்டது — எனக்கூறுவோர், கொள்கையை விட்டு கோணல் வாதம் நடத்துவோர் கொஞ்சம் மேல்நாடுகளைத் திரும்பிப் பார்க்கட்டும். ஏறத்தாழ 27 வயது வரை வாழும் இந்த நாட்டுக்காரனைவிட இரண்டு மடங்கு, மூன்று மடங்கு காலம் வாழ்கிறார்களே, அந்த நாட்டிலே என்ன நடக்கிறது என்பதைப் பார்க்கட்டும்! பாலின் சத்துத்தான் அது என்பதை அறியட்டும்!

பாலைப்போல் சிறந்த சத்துள்ள உணவில்லை; அது மனிதனின் முதுகெலும்புக்கு ஊட்டம் தருகிறது, மூளையை வளர்க்கிறது. சுவற்றைச் சீராக்குகிறது; சித்திரத்தையும் மெருகுபடுத்துகிறது. காணுமிடமெல்லாம் பால் பண்ணைகள் இருக்கும் நாட்டில் அறிவுப் பண்ணைகள் அதிகம் திகழ்வதைக் காணலாம்! உடலும் உள்ளமும் ஊக்கம் பெற பால் தேவை!

இந்நாட்டின் இன்றைய தேவை, முப்பால் தரும் குறள் கூட அல்ல; பால்! உடலுக்கும் உள்ளத்திற்கும் ஊட்டம் தரும் பால்! — என்றுகூட கூறிடத் தோன்றுகிறது.

ஆனால் இருக்கின்ற நிலையோ கருப்பையை விட்டு வெளிவந்த மூன்று மாதக் குழந்தைக்குக் கொடுக்கக்கூட மாட்டு பால் இல்லை; தவழ்ந்து வரும் குழந்தைகளின் வளர்ந்து வரும் சிறுவர்களின் நாக்கு நல்ல பாலை இதுவரை சுவைத்ததேயில்லை. பாலில்லாததால் வருங்காலம் பாழாகிறது!

இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும். நல்ல பால் கிடைக்க மாட்டுச் செல்வத்தை வளர்க்க வேண்டும். அதற்குத் திட்டங்கள் தேவை.

பல ஊர்களில் கூட்டுறவு பால் சப்ளை யூனியன் — என்றிருப்பதைப் போல் சென்னையிலும் ஏற்படுத்தலாம். அல்லது பால் கறவையாளர்களின் கூட்டுறவுடன் அரசினரே பால் சப்ளையை ஏற்படுத்த ஊக்குவிக்கலாம். அல்லது பால் கறவையாளர்களின் கூட்டுறவுடன் அரசினரே பால் சப்ளையை ஏற்படுத்தலாம். அல்லது பால் பண்ணையைப் பெரிதாக்கலாம்!

இத் திட்டங்களின் அவசியத்தை எடுத்துரைத்து, பசுவின் மேல் உயிரை வைத்திருக்கும் வடவர்களிடமிருந்து அதிக மானியம் பெற்றிருக்க வேண்டும் இந்த அரசு. செய்ததா? அது பற்றிச் சிந்தையிலும் எண்ணவில்லை.

சென்னை நகரில் உலவிடும் மாடுகளின் நிலைபற்றியும், அத ஒரு கொட்டிலில் ஒன்றாக அடைந்து கிடக்கும் பால்காரர்களின் கஷ்டங்களையும் அரசு அறியாமலில்லை.

எனவே, நகரத்தைச் சுற்றிலும் சுகாதார முறையில் பால் பண்ணைகளைப் பெரிய, அளவில் அமைத்து, நகரத்தின் பொது நலத்தைப் பாதிக்கும் மாட்டுக் கொட்டில்களை, மாட்டுச் சொந்தக்காரர்களின் உதவியுடன் அப்புறப்படுத்தி, நகரத்திற்கு சுகாதாரத்தையும் சுகத்தையும் அளிக்கும் பணியில் அரசு ஈடுபடவேண்டும்.

மற்ற நாடுகளைக் காட்டிலும் இந்த நாட்டில்தான் மிருகங்களுக்கு நோய் அதிகம் வருவதுண்டு. மனிதனைப்போலவே! மாடுகளுக்கு வரும் நோய்களை உடனுக்குடன் கவனிக்கவும் வேண்டும்.

ஆகவே, இக்கோரிக்கைகளை அரசு அலட்சிப்யபடுத்தாது சம்பந்தப்பட்டவர்களை அழைத்து ஆவன செய்து மக்கள் பாலினால் விளையும் பயனை அடையும்படிச் செய்தல் வேண்டும்.

சுதந்திரம் வந்துவிட்டால் 'வீதியில் பாலோடும் தேனோடும்!" என்று கூறுனீர்களே, குறைந்த அளவு ஒவ்வொருவரின் வீட்டிலாவது பால் பொங்க வழி செய்வீர்! மக்களின் துன்பத்தைப் பார்க்க விழி திறப்பீர்!

—அடியார்

சட்ட மன்றத்துச் சம்பவம்

சட்டசபையிலே அறிஞர் அண்ணாவின் பேச்சில் குறுக்கிடுவதென்றால் பிற அங்கத்தினர்களுக்கு சொல்லொண்ணா மகிழ்ச்சி. அதிலும் குறிப்பாக நிதியமைச்சர் சுப்பிரமணியத்திற்கு அண்ணா அவர்களின் பேச்சில் குறுக்கிடுவதில் தனி ஆனந்தம்.

அண்மையில் அண்ணா அவர்கள் பேசியபோது நிதியமைச்சர் குறுக்கிட்டதும் அண்ணா அதற்குத் தந்த பதிலும் சுவையானவை! அச்சுவை நிகழ்ச்சி இதோ:

ஒருநாள்: பஞ்சாயத்துத் தேர்தலில் ஆளைத்தூக்கிக் கொண்டு போவதைப்பற்றி அண்ணா பேசும் போது...

நிதியமைச்சர்:....தூக்கிக்கொண்டு போய்விடுவார்களே என்று பயப்படுகிற வரையில், ஒருவருடைய செல்வாக்குக்குப் பயந்து வோட்டு அளிக்கிற நிலைமை இருக்கிற வரையில், எந்த ஆட்சிமுறையும் எந்த ஜனநாயக அமைப்பும் வெற்றி பெறாது. ஆனால் எனக்கு மக்கள் பேரில் அதிக நம்பிக்கை இருக்கிறது. ஒரு சிலர் தவறாக நடந்துகொண்டபோதிலும் ஆயிரத்தில் தொள்ளாயிரத்து தொண்ணூத் தொன்பது பேர்கள் தைரியமாக, சுதந்திரமாக தங்கள் விருப்பப்படி செயல்படக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள் என்பதில் சந்தேகம் கிடையாது.

அண்ணா: மக்களிடத்தில் நிதியமைச்சர் அவர்களுக்கு இருக்கிற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பை எடுத்துக் கொண்டதற்கு மகிழ்ச்சியுறுகிறேன்.

நிதியமைச்சர்: நீங்கள் எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்ததற்கு என் நன்றி.

அண்ணா: அப்படித் தூக்கிக்கொண்டு போவதற்கு இடம் இல்லையென்று சொன்னால் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள முடியாத நிலையில்—சீதை ராவணனால் தூக்கிக்கொண்டு போகப்பட்டதை அவர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

நிதியமைச்சர்: அது அந்தக்காலம்; இந்தக்காலத்தில் முடியாது.

அண்ணா: அந்தக்காலத்தில் அப்படி நடந்தது. இந்தக் காலத்தில் நடக்காது என்று நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இப்போது சீதையைத் தூக்கிக் கொண்டு போவதற்குப் பதிலாக சீதாராமர்களையே தூக்கிக் கொண்டு போகிறார்கள். (சிரிப்பு)

இதற்கு முன்...

புலவரின் மகள் முத்துநகையும், கிழவேடதாரியும் புகார் அரண்மனையில் புகுந்தனர். கரிகாலன் முத்துநகையை மட்டும் தனியாக அழைத்தான். பின்னர் ஒற்றரும் மன்னனும் சந்திக்குமிடத்தை ஒழுங்குபடுத்தி அதில் பட்டுத் திரைக்குப் பின்னே வீரர்களை ஒளிந்து கொள்ளச் சொன்னான். புலவரை அழைத்துவர ஆள் அனுப்பினான்.

பிறகு முத்துநகையிடம் வந்து ஒற்றா வீரபாண்டியைப் பற்றி விசாரித்தான் மன்னன். அவனைப் பற்றி முழு விபரங்களும் தெரியாது—என்பதை ஒத்துக் கொண்டாள், முத்துநகை.

'வெளுத்ததெல்லாம் பால் என்று நினைத்து ஏமாந்த உன்னை வீட்டுக்கு அனுப்பப் போகிறேன்!'—என்று மன்னர் கூற, முத்துநகை திடுக்கிட்டாள். யாரை அழிக்கச் சென்றாளோ; அதே இருங்கோவேளிடம் மயங்கிவிட்டாளே —என்பதை யூகித்துத்தான் மன்னன் அவ்விதம் பேசினான்.

அதற்குள் புலவரை அழைக்கச் சென்ற வீரன் திரும்பினான். புலவரும் யவனக் கிழவரும் பேசிக்கொண்டிருக்கும் சேதியைக் கூறினான். அந்த வீரன் முத்துநகை முன்னர் இச்செய்தியைக் கூறியது கரிகாலனுக்குப் பிடிக்கவில்லை.

முத்துநகையோ 'பிடிபட்டுவிட்டான், இருங்கோவேள். அந்த யவனக் கிழவர்தான் இருங்கோவேள் மன்னன்!'—என்று கூவுகிறாள். அரசனே வியப்படைகிறான்.

பின்னர் முத்துநகை, தன் தந்தையான புலவர் காரிக் கண்ணனாரே இருங்கோவேளுக்கு நண்பர் என்றும், ஒரு நாள் யவனக் கிழவர் வேடத்திலிருந்த இருங்கோவேளுடன் புலவர் பேசிக்கொண்டிருந்த போது அவன் தவ்றவிட்டுப் போன பதக்கத்தைத் தான் எடுத்தது பற்றியும் கூறுகிறாள்.

ஆனால் அரசன், 'துரோகி அங்கில்லை; இங்கிருக்கிறான்'—என்று அவளை அழைத்துச் செல்கிறான் ஒற்றர் வீரபாண்டியும் அவனும் சந்திக்குமிடத்திற்கு! மன்னர் பேசிக்கொண்டிருக்கும்போது ஒற்றன் திடீரென்று கட்டாரியை அவன் நெஞ்சில் பாய்ச்சுகிறான்.

ஆனால் கரிகாலனுக்கு சிறு காயமும் ஏற்படவில்லை. காரணம், அவன் மார்பில் கவசம் அணிந்திருந்தான். திரையிலிருந்து உடனே வெளிப்பட்ட வீரர்கள் கொலைகாரனைக் கைது செய்தனர்.

என்ன ஆச்சரியம்! அரசன் எதிர்பார்த்தபடி அவன் இருங்கோவேளுமில்லை. முத்துநகை நினைத்திருந்ததைப்போல் வீரபாண்டியுமில்லை.

கொலை செய்ய வந்தவனை மிரட்டுகிறார்கள், 'யார் நீ?'—என்று! அவன் பதில் பேச மறுத்துவிடவே, நகக் கண்களில் ஊசியேற்றி உண்மையை வரவழைக்க உத்திரவு பிறக்கிறது.

மிரட்டலுக்குப் பயந்த அவன் தான் இருங்கோவேள் மன்னரின் ஆள் என்பதை ஒத்துக் கொள்கிறான். ,கரிகால் மன்னரைக் கொல்ல நியமித்த ஆட்களில் தான் ஒருவன்—என்றும், பாழ் மண்டபத்தில் முத்துநகையும் வீரபாண்டியும் மன்னரைச் சந்திக்கப் போவதைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டதாகவும், பின்னர் குதிரை வீரர்களை விட்டு அவர்களை ஏமாற்றி, வீரபாண்டியைப் படுகாயப்படுத்திவிட்டு, தான் கிழவேடம் தரித்துக்கொண்டு முத்துநகையுடன் வந்ததாகவும் கூறுகிறான்.

அவனைச் சிறையிலடைக்க உத்திரவிட்டுவிட்டு முத்துநகையின் வேண்டுகோளிற்கிணங்க யவனக் கிழவரையும் அவைப் புலவர் காரிக்கண்ணனாரையும் அழைத்துவர வீரர்களை அனுப்புகிறான் கரிகாலன்.

★

22. துரோகி எங்கே?

கரிகால் மன்னன் அழைப்பதாக முதலில் வந்த ஆளிடம்—'வருகிறேன்' என்று கூறி அவனை அனுப்பிவிட்டுத் தெருக் கதவையும் தாளிட்டுவிட்டு மீண்டும் யவனக்கிழவருடன்—அறுந்த இடத்திலிருந்து தம் பேச்சைத் தொடர்ந்தார் புலவர் காரிக் கண்ணனார். இருவரும் பேசிக் கொண்டிருக்கும்போதே தெருப் பக்கத்தில் குதிரைகளின் குளம்பொலி மிக வேகமாகக் கேட்டது. கரிகால் மன்னரால் அனுப்பப்பட்ட வீரர்கள் புலவரின் வீட்டு வாயிலில் வந்து இறங்கினர்.

தாளிடப்பட்டிருக்கும் கதவைத் தட்டி "புலவர் பெருமானே!" என்று கூவி அழைத்தனர்.

உள்ளேயிருந்த புலவருக்குத் தூக்கிவாரிப்போட்டது. யவனக் கிழவரின் முகம் மாறிவிட்டது. கதவைத் திறக்கலாமென்ற எண்ணமுடன் புலவர் எழுந்தார். ஆனால் யவனக்கிழவர் அவர் கையைப் பிடித்து இழுத்துத் தடுத்துவிட்டார். வெளியில் இருந்த வீரர்கள் கதவைத் தட்டிக்கொண்டேயிருந்தனர்.

புலவர், கதவைத் திறக்காமலே உள்ளிருந்தவாறு, 'என்ன? யார் அது? என்ன வேண்டும்?" என்று விசாரித்தார்.

"உங்களிருவரையும் உடனே அழைத்துவருமாறு அரசர் கட்டளை!' என்று வீரர்கள் பதில் கூறினார்கள்.

கிழவரும் புலவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். கிழவர் புலவரிடம் நாம் போகக்கூடாது என்று சைகை செய்தார்.

புலவர், சாமர்த்தியமாகப் பேசுவதாக எண்ணிக்கொண்டு, "இங்கு நான் மட்டுந்தானே இருக்கிறேன்!" என்று பதட்டத்துடன் கூறினார்.

"அப்படியானால் தைரியமாகக் கதவைத் திறக்கலாமே!" என்று ஒரு குறும்புக்கார வீரன் கிண்டல் செய்தான். மற்ற வீரர்கள் 'கொல்'லென்று சிரித்துவிட்டார்கள்.

புலவர் சற்றுக் கடுமையாகப் பேசினார், "மன்னரிடம் சொல்லுங்கள். புலவர் ஒரு தலையாய அலுவலில் ஈடுபட்டிருக்கிறார். பின்னர் வந்து சந்திப்பார்!" என்று!

வீரர்கள் விடுவதாக இல்லை. அரசனின் ஆணையை அவர்கள் நிறைவேற்றியாகவேண்டுமே!

"புலவர் பெருமானே! அரசரின் கட்டளைக்குக் கீழ்ப்பணிந்து நடக்கவேண்டியவர்கள் நாங்கள். தாங்களோ எல்லாம் அறிந்தவர். சோழவேந்தரின் கோபத்துக்கு எங்களைப் பலியாக்காமல் தயவுசெய்து அந்த யவனக் கிழவருடன் புறப்பட்டு வாருங்கள்." என்று கெஞ்சுங் குரலில் கேட்டுக் கொண்டனர் அந்த வீரர்கள்.

"நான் வருவது சரி. யவனக் கிழவர் எதற்காக வரவேண்டும்?"—புலவர் சற்று ஆத்திரத்துடன் கேட்டார்.

"தெளிவாகச் சொல்கிறோமே; யவனக் கிழவரைத் துரோகியென்று சந்தேகிக்கிறார் அரசர். அவரை விலங்கிட்டு அழைத்துச் செல்லவேண்டியதே முறை. ஆனால் அவர் தங்கள் வீட்டில் இருப்பதாலும், தங்களோடு வர இருக்கிற காரணத்தாலும் மரியாதையுடன் அழைத்து வரவேண்டுமென்று அரசர் விரும்புகிறார் போலும்!"—வீரர்களின் இந்தப் பதிலைக் கேட்டக் கிழவரும் புலவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். அவர்களால் எதுவும் பேசமுடியவில்லை.

கிழவர் மெதுவாகப் புலவரிடம், "தப்பியோடி விடலாமா?" என்று கேட்டார்.

"அதெல்லாம் கூடாது! வீட்டைச் சுற்றிலும் வீரர்கள் இருப்பார்கள். இருக்கட்டும். நடக்கிறவரையில் நடக்கட்டும்!" என்று புலவர், கிழவரை சமாதானப் படுத்திவிட்டு, கதவோரம் வந்து நின்று கதவைத் திறக்கா

மலே "மன்னரிடம் நான் சொன்னதாகக் கூறுங்கள். புலவர் காரிக்கண்ணன் தமிழ் உணர்ந்தவன். தமிழுக்குப் பிறந்தவன். அவன் துரோகிகளுக்குத் துணை போகமாட்டான் என்று கூறுங்கள்." என மடமடவெனப் பேசினார்.

"புலவரே! மன்னிக்கவேண்டும். தங்களையும் ஏமாற்றிவிட்டுத் துரோகிகள் தங்கள் வீட்டில் நுழைந்திருக்கலாம் அல்லவா? அதனால் இறுதியாகத் தெரிவிக்கிறோம்; அந்தக் கிழவரை அழைக்காமல் நாங்கள் யாரும் இந்த வீட்டைவிட்டு அகல முடியாது!"

வீரர்கள் கண்டிப்பாகக் கூறிவிட்டனர். கிழவர், தலையைத் தடவியவாறு வீட்டின் மேல் பாகத்தில் விழிகளை ஓடவிட்டார். எந்த யோசனையும் அவருக்குப் புலப்படவில்லை.

"என்னுடைய திட்டங்கள் எல்லாம் பாழாகி விடுமா?"

—என்று அவரது வாய் முணுமுணுத்தது. புலவர் கண்களில் கலக்கம் பிறந்தது. மூடப்பட்டிருக்கும் தெருக் கதவை வெறிக்கப் பார்த்துக்கொண்டே நின்றுகொண்டிருந்தார். வெளியில் இருந்த வீரர்கள், அதற்குள் எச்சரிக்கையாக வீட்டைச் சுற்றிப் பரவலாக நின்றுகொண்டார்கள். தன்னுடைய வீட்டைப் படை வீரர்கள் எப்படி வளைத்துக்கொண்டிருப்பார்கள் என்பதை யூகித்து மனமொடிந்து போனார் புலவர். யவனக் கிழவரை எவ்வாறு தப்பிடச் செய்வது? அவர் உள்ளம் பூகம்பமாயிற்று. தெருக் கதவு தட்டப்படும் ஒலி வேறு அவர் காதை அடைத்தது. திடீரென ஒரு முடிவை வீரர்கள் முன்னிலையில் வைத்தார் புலவர்.

"யவனக் கிழவரை மட்டும் அனுப்புகிறேன். அரசரிடம் அழைத்துச் செல்லுங்கள். நான் இப்போது வருவதற்கில்லை; பிறகு வருகிறேன் என்று அரசரிடம் கூறுங்கள்."

அதற்கு வீரர்களால் உடனே பதில் சொல்ல இயலவில்லை. அரசரிடம் அந்த யோசனையைக் கூறி அவர் பதிலைப் பெறுவதே நல்லது என்று தீர்மானித்தனர். ஒரு வீரன் அரண்மனை நோக்கி ஓடினான். மன்னனைக் கண்டு புலவர் சொன்னதைச் சொன்னான். அரசனுக்கு சந்தேகம் பிறந்துவிட்டது. கூப்பிட்டு அனுப்பியதும் இருவரும் உடனே வருவதற்குத் தயக்கம் காட்டுவது ஏனென்று அரசன் சிந்திக்க ஆரம்பித்தான்.

அருகிலிருந்த முத்துநகை "இரண்டு துரோகிகளையும் அழைத்து வர வேண்டியதுதான்!" என்று ஆத்திரமாக முழங்கினாள்.

நீண்ட யோசனைக்குப் பிறகு அரசன் முத்துநகையிடம், "என்ன இருந்தாலும் காரிக்கண்ணனார் தமிழ் மேதை, கவிதைக்கு அரசர். புவியாளும் மன்னர்களை விட மதிப்பு வாய்ந்தவர்கள் புலவர்கள். ஆகவே அவர்கள் இஷ்டப்படி சிறிது விட்டுக் கொடுக்க வேண்டியதுதான் முறை. நமக்கு வேண்டியது முதலில் அந்த நேரடிப் பகைவன். அவனைத்தான் நான் முதலில் பார்க்க வேண்டும். அதுமட்டுமன்றி அவன்தான் இருங்கோவேள் என்று உறுதியாக எண்ணவும் இடமில்லை. புலவர் பின்னர் மெதுவாக வருவதால் தவறு ஒன்றுமில்லை. முதலில் அந்த முதுமை வேடதாரியை அழைத்து வரச் செய்து அவன் யார் என்று அறிவோம். அதை அறியாமல் புலவரைப் பலவந்தமாக இழுத்து வரச் செய்து அவர் மனங் கோணுமாறு செய்துவிட்டால், பிறகு அவர் குற்றமற்றவர் என்று நிரூபிக்கப்பட்டு விட்டால் அவருக்கு நேரே நான் நிற்பதற்கும் இயலாத நிலை ஏற்பட்டுவிடும். நூறு குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல் விடுதலை பெற்றால்கூட அது பெரிய தவறில்லை; ஒரு நிரபராதி அநியாயமாகத் தண்டிக்கப்பட்டுவிட்டால் அதற்குப் பிறகு யாரிடமும் மன்னிப்புக் கோர முடியாது. உண்மையான குற்றவாளி இன்றில்லாவிட்டால் நாளை சிக்கிக்கொள்வான். நிரபராதியின்மீது பழி சுமத்தி விட்டால் அவன் அந்தக் களங்கத்தை நினைத்து நினைத்து வெந்து மடிவான். அதனால்தான் முத்துநகை, அரசியலில் எதையும் தீர யோசித்துச் செய்ய வேண்டும் என்ற கொள்கை வலியுறுத்தப்படுகிறது!" என்று கூறினான்.

அரசனின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட முத்துநகை, அவன் தமிழ் மொழியின்மீதும் அதைக் கற்ற மேதைகள்மீதும் வைத்துள்ள அன்புக்கும் மரியாதைக்கும் மனதுக்குள் பாராட்டு தெரிவித்து விட்டு அவன் கூறிய முடிவை ஏற்றுக் கொண்டாள்.

அதன்படி யவனக் கிழவர் மட்டும் வந்தால் போதும்; புலவர் பிறகு வரலாம்—என்ற கட்டளையுடன் வீரன் புறப்பட்டான்.

ஒற்றனைச் சந்திக்க ஏற்பாடு செய்த அதே இடத்தில் யவனக் கிழவரைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்யுமாறு கரிகாலன் உத்திரவிட்டான். வீரர்கள் தங்கள் மன்னனின் உயிரைத் தங்கள் உயிரினும் மேலாக மதித்து பட்டுத் திரைகளுக்குப் பின்னே பழையபடி பதுங்கிக் கொண்டனர்.

இருங்கோவேள் பிடிபடப் போகிறான்; அதனைத் தொடர்ந்து தன் தந்தையும் துரோகியென இழிமொழிப் பட்டம் பெறப் போகிறார்—என்ற எண்ணம் கொஞ்சங் கொஞ்சமாக முத்துநகையின் உடலில் எரிமலையை மூட்டிக்கொண்டிருந்தது. அதே நேரம் காதலனைப் பற்றிய நினைவும் அவளைப்பற்றிக் கொண்டு வேதனையில் ஆழ்த்தியது. இனிமேல் வீரபாண்டியை உயிரோடு காண முடியாது என்ற சோகத்தில்தான் அவள் மிதந்து கொண்டிருந்தாள். எதிர்காலம் ஒரே இருள் மயமாகத்தான் இருந்தது அவளுக்கு. அந்த இருளிலும் மாரி மின்னல் போல நாட்டுக்கு ஒரு நற்பணி புரிகிறோம் என்ற நினைவு அடிக்கடி பளிச்சிட்டுக் கொண்டிருந்தது.

சற்று நேரத்தில் இருங்கோவேளைக் கொண்டுவந்து விடுவார்கள். அவனைக் கண்டதும் "துரோகி! துரோகி!!" எனக் கூவ வேண்டும்; "எதிர் நின்று போர் புரிய முடியாமல் ஒளிந்திருந்து துரோகம் செய்யும் கோழையே!" என்று அவன் மீது ஆத்திரத்தைக் கொட்ட வேண்டும் என்றெல்லாம் அவள் தீர்மானம் செய்து கொண்டு தீப்பொறி பறக்கும் கண்களுடன் காத்திருந்தாள்.

புலவர் வீட்டு வாயிலில் காத்திருந்த வீரர்களிடம் அரண்மனை சென்று திரும்பிய வீரன் வந்து சேர்ந்தான். "புலவர், அவர் விருப்பம்போல் பிறகு வரலாம். முதலில் யவனக் கிழவனை அழைத்து வர உத்திரவு!" என்று மற்றவர்களிடம் கூறினான்.

உள்ளேயிருந்து உற்சாகத்துடன் புலவர் பேசியது வீரர்களின் காதில் விழுந்தது.

"அப்படியா? மன்னர் என்னைப் பிறகு வரச் சொல்லி விட்டாரா? மகிழ்ச்சி. என்ன இருந்தாலும் கரிகாலர் தமிழ்ப் புலவர்களை மதிப்பவர். அவர் வாழ்க! அவர் கொற்றம் வாழ்க! யவனக் கிழவரே! தாங்கள் வீரர்களுடன் செல்லுங்கள். நான் பிறகு வருகிறேன்."

புலவர், யவனக் கிழவரிடம் பேசுவதை வீரர்கள் கேட்டுக் கொண்டிருக்கும்போதே தெருக் கதவு திறக்கப்பட்டது. யவனக் கிழவர் மட்டும் வெளியே வந்தார். கதவு உடனே தாழ் போடப்பட்டது. வீரர்களுக்கு நடுவே கிழவர் வந்து நின்று தன் கைகளை விலங்குக்காக நீட்டினார்.

வீரர்கள், "விலங்கு தேவையில்லை!" என்று கூறிவிட்டு, உருவிய வாட்களுடன் கிழவரைச் சூழ்ந்துகொண்டு அரண்மனை நோக்கிப் புறப்பட்டனர்.

கரிகாலனும் முத்துநகையும் கிழவரின் வருகையை எதிர்பார்த்தவாறு மௌனமாக அமர்ந்திருந்தனர். இருவரின் சிந்தனைகளும் இரு வேறு துருவங்களில் அலைந்துகொண்டிருந்தன.

அப்போது, யவனக் கிழவரை இழுத்து வந்து எதிரே நிறுத்தினார்கள் வீரர்கள். பட்டுத் திரைகளில் ஒளிந்திருந்த வீரர்கள் தங்கள் பார்வையைக் கூராக்கிக் கொண்டு பாய்வதற்கு நேரத்தை எதிர்நோக்கியிருந்தனர். முத்துநகை, யவனக் கிழவரை உற்று உற்றுப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். கிழவர், அவளைப் பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டார்.

"நீ யார்?"-அரசன் கேட்டான், சற்றுக் கடுமையாக!

பதில் இல்லை.

"ஊமையா?"

அதற்கும் பதில் கிடையாது.

"நீ யவனக் கிழவனல்ல—நீதான் இருங்கோவேள் என்கிறேன். என்ன சொல்கிறாய்?"

அதற்கும் மௌனமேதான்!

முத்துநகை பரபரப்படைந்தாள்.

பட்டுத் திரைகள் ஆடிக் கொண்டிருந்தன.

கரிகாலன், கிழவரை நெருங்கி அவர் தலையில் கட்டியிருந்த துணியை அகற்றினான்; அடுத்தது தாடி! தாடி கையோடு வந்துவிட்டது.

"ஆ!"—ஒரே ஆச்சரியம்!

கரிகாலன், தீ மிதித்தவன் போல் ஆனான்.

முத்துநகை அதிர்ச்சி அடைந்தாள்.

யவனக் கிழவனாக வந்தது யார்?

அந்த உடையில் மறைந்திருந்தது யார்?

புலவர் காரிக்கண்ணனார்தான்!

வெட்கம் வெட்கம்!

*

மீண்டும் முரசொலித்தது ஆந்திரத்திலிருந்து. டில்லியை எதிர்த்து! முன்பொரு தடவை 'டில்லிக்கு இத்தனை ஆதிக்கமோ? சேர வாரீர் தென்னக மக்களே, ஓர் அணியில்!'—என்றழைத்த ஆந்திர முதலமைச்சர் மீண்டும் மனங் கசந்து பேசுகிறார்.

'பாதுகாப்பு, வெளி விவகாரம், நிதி ஆகிய துறைகள் அங்கே இருந்து தொலைக்கட்டும். எஞ்சியவை அனைத்தும் எமக்குத் தரட்டும்!' — என்று அனுபவக் குரலை எழுப்புகிறார்.

இப்படிப்பேசும் ஆந்திரத்து முதல்வரும் காங்கிரஸ்காரர்தான்; அவரும் கதருடை பூணுபவர்தான்; காந்தி வழி நடப்பவர்தான்!

ஆனால் நம் காங்கிரஸ் அமைச்சர் இதுவரை டில்லியை நோக்கி ஒரு எதிர்ப்புப் பெருமூச்சு...?

'ஏன் இல்லை? மரக்கால், படி, ஆழாக்கு உபயோகிப்பதை நிறுத்திவிடக் கேட்டார்கள்....மறுத்து வேண்டுகோள் விட்டோம். அத்தனை ஏன்? அண்மையில் லூர்தம்மாள் சைமன் கலந்து கொண்ட அகில இந்திய பஞ்சாயத்து சபையில் பஞ்சாயத்து தலைவர், துணைத் தலைவர்—ஆகிய இரு ஆங்கிலப் பதங்களை மாற்றி இந்தியில் போட வேண்டும் — என்றார்கள் வடகத்திப் பிரதிநிதிகள். லூர்தம்மாள் சைமன் அது ஆகாது என்றார். அப்படிச் செய்யாதீர்கள்—என்று வேண்டிக் கொண்டாராக்கும்!'—என்று பெருமை பாடுவார்கள் நம் அமைச்சர்கள்!

உண்பது நாழி, உடுப்பது நான்கு முழம்—என்று வழிவழி வந்த பண்பாட்டின் அளவையாம் படியை, மரக்காலை மாற்ற உத்திரவிட்டாலும், கோதுமையை தராசில் நிறுத்துச் சாப்பிடும் வடநாட்டான்!

இவர்கள் மறுத்து வேண்டுகோள் விட்டார்களாம்!

நாட்டுப் பிரச்னைகள் எத்தனையோ இருக்க சின்னஞ்சிறு பஞ்சாயத்துச் சொற்களை மாற்றவேண்டும் என்று மொழி வெறி ஒழுக வாய் திறந்து கூறினாலும், வட நாட்டான!

இவர்கள் மறுத்து வேண்டுகோள் விட்டார்களாம்!

காட்டு மிராண்டிகளாய்த் திரியும் நாகர் கூட்டம் தனியாட்சிக்குப் போர்க்கொடி ஏந்துகிறது! உலக நாடுகளுக்கு நாகரீகம் கற்பித்த நாட்டின் அமைச்சர் நத்திப் பிழைக்கிறார்கள்; புழுவாய்—பூச்சியாய் கொட்டிய கையை முத்தமிட்டுக் கொண்டு வேண்டுகோள் விடுக்கிறார்கள்!

வெட்கம்; வெட்கம்!

உழுகின்ற தோழரைக் காத்து அழுகின்ற நிலை மாற்றுவோம்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் திட்டமில்லை—என்று கூறுவதை ஒரு அரசியல் நாகரீகமாகக் கையாண்டு வருகிறார்கள், மாற்றுக் கட்சியினர். குறிப்பாக விவசாயத்துறைபற்றி தி. மு. கழகம் மூச்சுக்கூட விடுவதில்லை, குழப்பி விட்டு ஓடுவதுதான் இவர்கள் கொள்கை—என்று கேலி பேசுவார்கள்.

ஆனால் நாட்டிலே எழுந்துள்ள அமளியைப் பார்க்கும் போது, விவசாய பெருமக்கள், நிலத் திமிங்கலங்களின் தூண்டுதலினால் கொதித்துநிற்கும் நிலையைப் பார்க்கும்போது யார் குழப்பவாதிகள் என்று நிச்சயம் தெரியும்.

காங்கிரசின் கொடிக் கம்பத்தின் கீழே நிற்பவர்களில்தான் குழப்பமும், கொள்கைவேறுபாடும் காணப்படுகிறதே தவிர திராவிட முன்னேற்றக் கழகத்தாரிடம் அல்ல!.

நிலவுடமை பற்றி திராவிட முன்னேற்றக் கழகம் தன் திட்டவட்டமான முடிவைத் தெரிவிக்க தனியே ஒரு குழுவையே நியமித்துச் செயல்படுத்தும் நற்செய்தி அவர்களின் கேளாக் காதுகளில் விழுந்திருக்காது.

மற்ற உரிமைப் பிரச்சினைகளைப் போலவே, அரசினரின் நிலவுடமை வரம்புச் சட்டத்தையும் கொள்கையளவில் மனமார ஏற்றுக்கொள்கிறோம். இதற்கிடையே அரசினர் விவசாய வருமான வரி பற்றி ஓராண்டிற்கு முன் தன் அப்பழுக்கற்ற முடிவை சட்டமன்றத்திலும் வெளியிலும் எடுத்தோதியிருக்கிறது.

3,600 ரூபாய்க்குமேல் நில வருமானம் உள்ளவர்கள்—100 ரூபாய்க்குமேல் நிலவரி செலுத்துபவர்கள் ஆகியோருக்கு வரி விதிக்கும் விவசாய வருமான வரி பற்றி நாம் தெளிவாக சொல்லவில்லை—என்று விவசாயப் பெருமக்களிடையே விஷமப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள், காங்கிரசார் சிலர்.

இந்தத் திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்றிருக்கிறது. அதுமட்டுமல்ல; மற்றபிற கட்சிகளும் இந்த அடிப்படைக் கருத்தில் ஒன்றிவந்ததைப்பற்றித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்து ஜனநாயகப் பாரம்பரியத்திலிருந்து சிறிதும் வழுவாத ஒரே ஒரு கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் — என்பதையும் நிரூபித்திருக்கிறது.

இம்மாதிரி விவசாய வருமான வரித் திட்டத்தை ஏதோ இந்நாட்டில் புதிதாகப் புகுத்தி விட்டோம், இந்தப் பூமிப்பந்து காணாத அதிசயத்தைச் செய்து விட்டோம்—என சுயத்தம்பட்டம் அடித்துக் கொள்ளும் காங்கிரசின் மமதையை அடித்துத் தரை மட்டமாக்கி இம்மாதிரி வரி விதிப்பு முற்போக்கு நாடுகளில் உண்டு — எனக் கூறியதும் நம் கழகம்தான்.

'இந்த வரி தீதானது: தீர்த்துவிடும் ஏழையின் நல்வாழ்வை'—என நீலிக் கண்ணீர் வடித்த நிலப்பிரபுக்களுக்கு மேலை நாட்டு வரலாற்றை எடுத்துக் காட்டி அங்கெல்லாம் 'இந்தவரி விதித்தும் முன்னேற்றத்தில் குந்தகம் ஏற்படவில்லை'—எனக் கூறி அவர் தம் வாயடைத்ததும் நாம் தான்!

அவர்கள் தங்கள் நாட்டில் இந்தச் சீர்திருத்தத்தைச் செய்து வெற்றி கண்ட பிறகு, அதுவும் நெடுநாட்களுக்குப் பிறகு நம் மாநில அரசுக்கு இந்த வரி போடத் துணிவு பிறந்தது. இன்னும் சொன்னால், இந்தியத் துணைக் கண்டத்திலேயே இந்த வரி பல மாநிலங்களில் விதிக்கப்பட்டு நெடுநாட்கள் ஆனபிறகுதான் நம் அரசுக்குத் தைரியம் புறப்பட்டது.

காலம் கடந்து, ஒரு வரியைக் கொண்டு வந்தார்கள். அந்த வரிக்குப் பின்னே நல்லெண்ணம் ஒளிவிடுவதாக எண்ணியதால்தான் கழகம் இந்த வரியை வரவேற்றது! வரி வந்த கதை. அந்தக் கதையை உண்டாக்கிய சூழ்நிலை நம்மைப் போன்ற முற்போக்குவாதிகளாலே தோற்றுவிக்கப்பட்டது — என்பதையும் உணர்த்தினோம்.

ஆனால் நமக்கிருந்த தெளிவு ஆளும் கட்சியினரிடையே இல்லை. இந்த வரியை எதிர்த்தவர்களையும், திருத்தம் கூறுகிறேன்—என்ற போர்வையை இழுத்து மூடிக்கொண்டு எதிர்த்தவர்களையும் மக்கள் மன்றம் சந்தித்திருக்கிறது. ஆச்சரியக்கடலில் ஆழ்ந்துபோயுமிருக்கிறது. அப்படி ஆச்சரியம் விளைவித்தவர்களில் பெரும்பான்மையோர், எந்தக் கட்சி இந்த விவசாய வருமானவரி • விதிப்பைக் கொண்டு வந்ததோ அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள்தான்—என்பதையும் அறிந்திருக்கிறது.

சட்டமன்றம் கூடி அதுவரை ஒரு சொல் பேசாத காங்கிரஸ் நண்பர்கள் மன்றத்திலே எதிர்ப்புக் குரல் கொடுத்தார்கள். வெளியிலேயே விவசாயப் பெருமக்களைத் தூண்டி 'இனி காங்கிரசை இப்படி விடக்கூடாது'—என்று கூவிடச் செய்தார்கள்.

வேடிக்கைக் கதைகள் பல கூறி எதிர்த்தார்கள். வேதனை வரலாறு பலப்பல சொன்னார்கள்.

'இந்த வரியால் உற்பத்தி பெருகாது!' — என்று சர்க்காரை பயமுறுத்தினார்கள்.

'இந்தச் சட்டம் ஓட்டை நிறைந்தது. இதை மீறுவதற்கு வழி இருக்கிறது. ஒருவருக்கு 100 ஏக்கர் நஞ்சையும், புஞ்சையும் இருந்ததென்றால், அவர் சர்க்காரை ஏமாற்றி தன் 4 பிள்ளைகளுக்கும் பன்னிரண்டரை ஏக்கர் வீதம் பிரித்துக் கொடுத்துவிடுவார். ஏனென்றால் பன்னிரண்டரை ஏக்கரை வரி இல்லாத ஸ்டாண்டர்ட் ஏக்கர் — என்றல்லவா குறித்திருக்கிறது!—என்று விவசாய வருமான வரிச் சட்டத்தின் ஓட்டையைச் சொல்லிய அந்தப் பிரமுகர் அதை அடைக்க வழி கூறாமல்,

" பன்னிரண்டரை ஏக்கர் ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று இருப்பதை பதினைந்து ஏக்கர் என்று மாற்றுங்கள்!"

—என்றுகூறி, முன்னுக்குப்பின் முரணாகப் பேசித் தீர்த்த கேலியையும் மக்கள் மன்றம் கண்டு ரசித்தது.

அதேபோல் விவசாய வருமான வரியை ஆதரித்த சிலர் அருமையான உதாரணங்களைச் சொன்னார்கள். இப்படி இரண்டு விதமாக காங்கிரசார்தான் பிரிந்துப் போராடுகிற காட்சியையும் கண்டார்கள்.

'இந்தச் சட்டத்தினால் சமதர்மம் வளருமா; விவசாயம் வளர்ச்சி அடையுமா?"—என்று இரண்டையும் தொடர்பு படுத்திப் பேசுகிற குழப்பமோ இன்னும் தீரவில்லை.

இத்தகைய தொடர்பில்லாத குழப்பங்கள் தோன்றிடக் காரணமே ஆட்சியாளரின் சட்டத்தில் தெளிவில்லாமைதான். 'எதற்காகக் கொண்டு வருகிறோம், இந்தச் சட்டத்தை!' என்று காரணத்தை அறிவிக்கும் முறையிலே தவறி விட்டார்கள்.

'சமதர்ம பாணி சமுதாயம் நம் இலட்சியம். இலட்சியத்தின் முன்னேற்றத்தைத் தடை செய்வது சொத்துரிமை; நிலச் சொத்துரிமை. அந்த நிலப்பிரபுத்வம் ஒழிக்கப்பட வேண்டும்!' என்று கூறி சட்டத்தைக் கொண்டு வந்திருந்தாலாவது மற்றவர்களின் வாழ்த்தைப் பெறமுடியும்.

ஆனால் இவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த வழியே வேறு. அதற்குக் கூறிய காரணமும் விசித்திரமானது.

"மத்திய சர்க்கார் எங்களுக்குத் தர இருந்த வரிப் பணத்தில் கொஞ்சம் குறைத்து விட்டார்கள். அதனால் நிதி நிலையில் துண்டு விழும் போலிருந்தது. மேலும் இங்கு வரிபோடுவதற்கில்லை. இடையிலே பணம் கொஞ்சம் வேண்டும். இந்தப் பணத்தை யாருடைய மடியில் கைவைத்து எடுக்கலாமென்று பார்த்தோம். இந்த மடி கனமான மடி என்று தெரிந்து கொண்டோம். ஆகவே போடுகிறோம், வரி!' —என்றுதான் இவர்கள் வரிவிதிப்பிற்கான காரணம் பேசுகிறது!

மிக முற்போக்கான காரணங்களினால் கொண்டு வரப்படவில்லை — தேவையைப் பூர்த்தி செய்யும் கருவியாக்கப்பட்டிருக்கிறது, இந்த வரி—என்பதையும் இவர்களின் செயல் விளக்குகிறது.

இலட்சக் கணக்கில் ஏக்கர்கள் வைத்துக் கொண்டிருக்கும் மத ஸ்தாபனங்களை இந்த வரியின் பார்வையிலிருந்து அகற்றிய செயல் இவர்களின எண்ணத்திலே நல்ல தன்மை உண்டா—என்றும் சந்தேகிக்க வைத்து விட்டது, நாட்டு மக்களை!

இன்னொரு பேரச்சமும் மக்கள் மனதிலே இவர்களைப் பற்றி எழுந்திருப்பதை இவர்கள் அறிய மாட்டார்கள்.

இந்த வரியால் ஏற்படும் குழப்பங்களைக் காட்டி, அடுத்து நில உடமை உச்ச வரம்புத் திட்டம் வந்தால் நாட்டில் அமளி ஏற்படும்—என்று கூறிடத்தான் இந்தத் திட்டத்தை அரைகுறையாகக் கொண்டு வந்தார்களோ என்றந்த அச்சம் மேலும் மேலும் வளரும், நில உச்ச வரம்புத் திட்டத்தை இவர்கள் தள்ளிப் போட்டுக் கொண்டு போகும் வரை! இவையெல்லாவற்றையும் தி. மு. கழகம் கூர்ந்து கவனிக்கிறது. ஆங்காங்கு தன் கருத்துக்களைக் கூறிவருகிறது.

திட்டம் தீட்டவும், அதை நடத்திக் காட்டவும் வசதியும் வாய்ப்பும் பெற்ற ஆளும் கட்சியினரே, விவசாயத்துறை பிரச்சினைகளைக் கண்டு ஓடுபவரல்ல தி. மு. கழகத்தினர். என்றென்றும் நல்ல கருத்துக்களுக்கு, பிரச்சினைகளுக்கு, வரவேற்பும், ஒத்துழைப்பும், விளக்கமும் தருபவர்கள் அவர்கள் — என்பதை உணருங்கள்.



சுழல் விளக்கு

மாலுமி

சி. ரகிமான்; ஏந்தக்குடி.

(?) இந்திய அரசினரின் நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய் ஐரோப்பாவில் ரயிலிலேயே பயணம் செய்வது ஏனோ?

ஆகாய விமானத்தில் பயணம் செய்தால் பணம் மீதமாகும் என்ற சிக்கனப் புத்தியால் அல்ல தோழரே! அவருக்கு ஆகாயத்திலே கண்டம் இருப்பதாக யாரோ ஜோதிடன் சொன்னானாம். அதையே வேதவாக்கு என்று நம்பி ஐரோப்பாக் கண்டம் முழுதும் ரயிலில் சென்றாராம், சோதிடத்தை நம்பாத நேருஜியின் ஆட்சியிலே அங்கம் வகிப்பவர்!

சி. சுந்தரேசன்; மதுரை.

(?) அமெரிக்காவில் தமிழ் படிக்கப் போகிறார்களாமே?

இனி இங்கிருந்து வடமொழித் தாசர்கள் பலர் அங்கு அனுப்பப்படுவார்கள். 'சமஸ்கிருதத்திலிருந்துதான் தமிழ் பாஷை பிறந்தது'—எனும் நச்சுக் கருத்தை அந்த நாட்டிலும் தூவுவார்கள். அந்த வெறியர்களிடமிருந்து தமிழ் கற்றுக் கொள்ளப்போகும் அமெரிக்கர்களுக்கு எம் ஆழ்ந்த அனுதாபங்கள்.

ம. செ. பாண்டியன். மாத்தூர்.

(?) கராச்சியில் ரிக்ஷாவை ஒழித்துவிட்டார்களாமே?

சத்தம் போட்டுக் கூறாதீர்கள். 'பிரிந்துபோன அச்சிறு நாடு வளத்தில் சரிந்துபோய்க் கொண்டிருக்கிறது!' என்று கூவுகின்ற காங்கிரசாரின் கோபப் பார்வை உங்கள்மீது திரும்பிவிடும். ஜாக்ரதை!

பரமேசுவரன்; அன்னூர்.

(?) நம் நாட்டின் உணவு நிலை எப்படி இருக்கிறது?

மந்திரிகளின் வாயிலாகத் தெரிந்து கொள்ள நினைத்தீர்களானால் அது உங்கள் அறியாமையைக் காட்டும். ஏனென்றால் ஒரு மந்திரி நமக்கு வியட்நாமிலிருந்து அரிசி வருகிறது — என்பார். இன்னொருவர் சுயதேவை அடைந்து விட்டோம் உணவு நிலையில்—என்பார். ஆனால் ஏழையின் வீட்டில் என்னமோ அரிசிப் பானை காலியாகத்தானிருக்கிறது!

மணி; விக்ரமசிங்கநல்லூர்.

(?) இந்தியாவில் சீனர் ஏன் நுழைகிறார்கள்?

காடு பிடிக்கும் ஏகாதிபத்ய ஆசை கொண்டுதான் நுழைகிறார்கள் என்று கூறுகிறார்கள், இங்குள்ளோர். வண்ணத்திப் பூச்சி பிடிக்க வருகிறோம்—என்கிறார்கள், சீனர்.

ந. வீரய்யா; கழுகுமலை.

(?) ஜப்பானிடம் கடன் கேட்கவில்லை—என்று இந்திய நிதியமைச்சர் மறுத்திருக்கிறாரே?

அவர் திருப்பித் தரும் கடன் கேட்டிருக்கமாட்டார்!

பி. சு. மனோகரன்; தொப்பலூர்.

(?) நாகர்கள் ரகசிய மாநாடு நடத்தியதைப்போல் திராவிடர்கள் நடத்தினால்....?

நடத்தவேண்டாம்: நடத்துகிறோம் — என்று அறிவித்தால் போதும், 'ஜனவரி—6' மறுபடியும் திரும்பும்!

அ. பழனிசாமி: கூனூர்.

(?) நியாயவிலைக் கடைகள் எப்படியிருக்கின்றன?

அங்கு எப்போதும் எதுவும் இல்லை—என்ற போர்டு தொங்கிக் கொண்டிருக்கும். மறுபுறத்தில் அரிசி கள்ள மார்க்கட்டில் விற்பனையாகிக் கொண்டிருக்கும். சென்னையில் ஒரு நாளில் மட்டும் 41 மூட்டை கைப்பற்றப்பட்டு 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

சந்திரன்; கரூர்.

(?) தமிழ் நாட்டில் மாத்திரம் ஏன் விபத்துக்கள் தொழிற்சாலைகளில் ஏற்பட்டு வருகின்றன?

ஆண்டுக்கு எட்டாயிரம் விபத்துக்கள் வீதம் அதிகரிப்பதைக் கண்டுகூட அரசு கலங்கவில்லை. தடுக்க முயற்சி எடுக்கவில்லை! இந்திய அரசுக்கு எதிராக நடக்கப்போகும் விபத்தைத் தடுப்பதில்தான் — பிரிவினை உணர்ச்சியை மடிய வைப்பதில்தான் அதன் கவனம் முழுதும் இருக்கிறது.

என். கிருஷ்ணன்; மைலம்.

(?) உணவு மந்திரி பட்டீல் திறமைசாலியா?

உணவு நிலையைச் சரிப்படுத்துவதில் இல்லையானாலும், எதிர்க் கட்சிகள் அயர்ந்து விழுந்து விடுகிற அளவிற்கு அபாண்டமான புள்ளிவிபரங்களைக் கூறுவதிலும், மக்கள் பேரில் தான் தப்பு—என்று அடித்துக் கூறுவதில் அவருக்கு மிஞ்சியவர் யாருமில்லை.

(?) இந்தி மொழி யாருக்குப் புரியும்?

இந்தியாவின் இரண்டு மாநிலங்களில் இருப்பவருக்குப் புரியும். சில இலட்சக் கணக்கான பேருக்குப் படிக்கத் தெரியும். சில நூறு பேருக்குப் படிப்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஒரு சில பேருக்கு அந்த மொழியின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கத் தெரியும்.

ராம. சுப்பையா; பள்ளனூர்.

(?) அரசியலில் சண்டைகளை மூட்டிவிடுபவர்கள் யார்?

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இன்றைய 'தேசியத் தினசரி'கள் தான்!

'கண்டுவந்தோன்'—சென்னை.

(?) சட்ட மன்றத்தில் அமைச்சர்களில் ஒரு சிலர் உட்கார்ந்து கொண்டே பேசுகிறார்களே?

அவர்கள் உட்கார்ந்து கொண்டாவது பேசுகிறார்களே என்று மகிழ்ச்சி கொள்ளுங்கள். அப்படிப்பேச வைத்ததும் நம் கழகத்தவர் என்பதிலும் பெருமை கொள்ளுங்கள்.

பழ. நாராயணன்; புதுக்கோட்டை.

(?) தமிழ்நாட்டுத் தினசரிகள் இப்போது தி. மு. க. மாநாட்டுச் செய்திகள், கூட்டச் செய்திகளைப் போட ஆரம்பித்திருக்கின்றனவே?

அண்மைக் காலத்தில், ஏதோ போட்டுக் கொண்டு வருகிறார்கள். ஒரு சில பத்திரிகைகள் 'இரண்டாந்தரமான' இடத்தைத்தான் நமக்குத் தருகின்றன. அகில இந்திய ரீதியில் நடக்கும் சின்னஞ்சிறு கட்சிகளின் நடவடிக்கைகளை விளம்பரப்படுத்தும் அளவிற்கு பெரிய கட்சியான நம் கொள்கைகளை வெளியிடுவதில்லை. அப்படி வெளியிட்டாலும் தாறுமாறாக வெளியிடுகிறார்கள். 'இந்து' போன்ற பத்திரிகை நமது தலைவர்களின் நல்ல கருத்துக்களை சரியான முறையில் வெளியிடுவதில், எக்காரணம் கொண்டோ தவறிவிடுகிறது. இம்மாதிரி செயல்கள், ஜனநாயக வளர்ச்சியை ஆணி வேரோடு அறுத்தெறிபவையாகும்!

டி. தங்கராசன்; திருவள்ளூர்.

(?) நீங்கள் மனித சக்தியின் பக்கமா? இயந்திர சக்தியின் பக்கமா?

நாங்கள் மனிதர்கள். ஆகவே மனித சக்தியை நம்புகிறோம். மனித சக்திக்கு வசதி தரும் இயந்திர சக்தியும் வேண்டும் —என்றும் கூறுகிறோம்.

அமிர்தகௌரி; மேட்டூர்.

(?) அரசாங்க முத்திரையில் மூன்று சிங்கங்கள் இருக்கிறதே; ஏன்?

அதற்கு அவர்கள் தரும் விளக்கம், எந்த மிருகங்கள் சேர்ந்தாலும், மூன்று ஆண் சிங்கங்கள் ஒன்று சேராது. இங்கு அப்படிச் சேர்த்து வைப்பது தூய்மையான அறம்—என்பதே! ஆனால் இது நமக்கு மூன்று தனித்தனி இனங்கள் இந்நாட்டில் ஒன்று சேர்க்கப் பட்டிருப்பதைக் காட்டுகிறது. ஆரிய, திராவிட, மங்கோலிய இனங்கள் இப்படி சர்க்கஸ் வித்தை செய்து ஒன்று சேர்ந்திருப்பது, ஆளுவோரின் தூய்மையான அறத்தாலல்ல; துப்பாக்கி பலத்தால்!

ராசியண்ணன்; சோமனூர்.

(?) இந்தியின் வரலாறு என்ன?

வடநாட்டு மொழிகளின் கலப்பிலே பிறந்தது; ஆதிக்கம் பெற்றது! தென்னாட்டு மொழிகளின் கைகலப்பிலே, ஆதிக்க உயிரிழக்கப் போகிறது!

பக்கிரிசாமி; உறையூர்.

(?) கழகம் தன் நடைபாதையைக் கொஞ்சம் மாற்றிக் கொண்டால்...?

ஆட்சிபீடம் இப்போது நம் கையில் இருக்கும். ஆனால் நாம் வெள்ளை உள்ளத்தவர். அப்படியே எப்போதும் வாழ நினைக்கிறோம். ஆகவே கள்ளச் சிந்தை இல்லை. சென்னை அரசு நம் கையிலே — என்பதைவிட ஜனநாயகத்தை வளர்த்தோம்—என்ற பெருமையை அடைய விரும்புகிறோம். நடைபாதையை அடிக்கடி மாற்றி, வரலாற்றின் கடைக்கோடிக்குப் போனவர்களின் கதை நமக்குத் தெரியும். வெறும் வரலாற்றைப் படித்துக்கொண்டிருப்பவர்கள் அல்லர் நாம்; வரலாற்றை உண்டாக்கப்போகும் விடுதலை வீரர்கள்!

உணர்ச்சி வருமா? எழுச்சி பெறுமா?

சுதந்திரப் போருக்கு உழைத்த தீரர்—மீரத்சதிவழக்கின் கதாநாயகர்—கம்யூனிசத்தின் கால் இந்த நாட்டில் ஊன்றிட வழிவகுத்தவர்—என்று கம்யூனிஸ்ட்டுகளால் பாராட்டப்பட்டவர் அறுபது வயது நிரம்பிய தோழர் டாங்கே ஒரு மாபெரும் அதிர்ச்சியை தம் தோழர்களுக்குப் பிறந்தநாள் பரிசாகத் தந்துள்ளார்.

'இந்திய—சீன தகராறில் என் கட்சியின்கொள்கை எனக்கு உடன்பாடல்ல; எனக்கும் கட்சிக்கும் இருக்கும் கருத்து வேற்றுமையை மறைக்க விரும்பவில்லை!'—என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

மனத்துணிவோடு தம் நெஞ்சக் கிடக்கையிலுள்ளதை எடுத்துக் கூறியிருக்கிறார். கட்டுப்பாடான இயக்கம் என்றால் கம்யூனிச இயக்கம்—என்று சிலர் பெருமை பாடித் திரிகின்ற கூட்டத்திலிருந்துதான் இந்த உண்மைக்குரல் — உரிமைக்குரல் வெளிவந்திருக்கிறது.

இதே போல் முன்னொரு தடவை கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் அஜாய் குமார் கோஷ் 'கம்யூனிஸ்ட் ஆட்சிக்கு வந்தால் குறுகிய நோக்கம் கொண்ட கட்சிகளைத் தடை செய்யும்!'—என்று கூறியபோது, மறுப்புரைத்தார் டாங்கே! தன் கருத்திற்கேற்ப அஜாய் கோஷைத் திருப்பினார்.

எப்படி அவருக்கு இந்தத் தைரியம் வந்தது?

தான் இருக்கின்ற மண்ணை நேசிக்கிறார் அவர். 'சம்யுக்த மகாராஷ்டிரா சமிதி'—என்ற மராட்டியத்தை மட்டும் நினைக்கின்ற இயக்கத்தின் தலைவராக இருக்கிறார். கம்யூனிஸ்ட்டுகளின் பரந்த பார்வையிலிருந்து மாறுபட்டதுதான் அது என்றாலும் தாயகத்தின்மீது மாறாத பற்றுக் கொண்டுள்ளார்.

மராட்டியக் கம்யூனிஸ்ட் டாங்கேவுக்கு மராட்டியம் என்றால் ஒரு உணர்ச்சி! தாயகம் என்றால் ஒரு எழுச்சி! அந்த உணர்ச்சியும் எழுச்சியும் நம் தமிழகத்துக் கம்யூனிஸ்ட்களுக்கு வருவது என்றோ?

வருகின்ற லாபம் வடக்கே! வாடுகின்ற நிலைதான் நமக்கோ?

இராஜ்ய மத்திய சர்க்காரகளும், காங்கிரஸ் கட்சியினரும் மூன்ரும் ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிப் பெரிதும் பேசத் துவங்கியுள்ளனர். பத்தாயிரம் கோடி ரூபாய் அளவில் மூன்ருவது திட்டம் உருவானல்தான் இந்தியாவின் தொடர்ந்த பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றதாய் அத்திட்டம் திகழும் என்ற கருத்து பலப்பட்டு வருகின்றது.

சங்கிலிபோல தொடர்ந்து வருகின்ற திட்டங்கள் ஒன்றுக்கொன்று உதவிக்கொள்ளக் கூடிய முறையில் நல்லதோர் தொடர்பு இருக்க வேண்டியது இயற்கையாகும். இரண்டாவது திட்டத்திற்கும் மூன்ருவது திட்டத்திற்கும் எந்த முறையில் பிரிக்கமுடியாத தொடர்பு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்ப்பது நல்லதே. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தன்னை முழுமையாக்கிக் கொள்ளவேண்டி அயல்நாடுகளில் இந்தியாவின் மானத்தை, சுயமரியாதையை, நம் பொருளாதார வளங்களை அடமானமாக வைத்து வாங்கியுள்ள பெருங் கடன்களை வகையாகத் தீர்க்கவேண்டிய பெருஞ் சுமையைத்தான் தன்னுடைய அழியாத் தொடர்பாக மூன்ருவது திட்டத்திற்கு விரும்பினலும் வெறுத்தாலும் தந்து விட்டு விடைபெற்றுக் கொள்ள இருக்கின்றது.

வாழ்வில் நெறி கெட்டு, முறை தவறி வாழ்வு நடாத்திய தந்தை, தன்னுடைய குழந்தைச் செல்வங்களுக்கு நோய்களை பெருஞ் சொத்தாக விட்டுச் செல்வதைப் போல, தன் கற்பைக் கடைச் சரக்காக்கி வாழ்வில் நெளிந்த ஒருத்தி தன்னுடைய வாரிசுகளுக்கு அவக்கேட்டையே வாரிசாக வழங்கி விட்டுப்போவதைப் போல இரண்டாம் திட்டம் மூன்ருவது திட்டத்திற்கு அயல் நாடுகளில் பெருமளவிற்கு வாங்கியுள்ள கடன்களைத் தீர்க்கும் சுமக்க முடியாத பொறுப்பையே தன் நினைவாக விட்டுச் செல்ல இருக்கின்றது.

மூன்ருவது திட்ட விவாத நிலையில் இருக்கும் இந்த நேரத்தில் அயல்நாட்டினுடைய கடன்களைத் தீர்க்கும் பிரச்சினை ஒரு சிக்கலான பிரச்சினையாக மாறியுள்ளது. எனவேதான், திட்டம் முழுவதும் தெளிவாக வகுக்கப்படுவதற்கு முன்னரே இந்திய நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்கள் இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, ஜப்பான் போன்றவற்றிற்கு சுற்றுப்பயணம் செய்து இந்திய நிதி நிலைமைகளை அவரவர்களும் உகந்த முறையில் விளக்கி, தேவைகளை நளினமாக எடுத்துச் சொல்லி நாடு திரும்பியுள்ளார். மற்றைய அமைச்சர்களுக்கும் அயல்நாடுகள் இந்தியாவுக்கு உதவும் எனும் நம்பிக்கையைத் தெரிவித்து அபயமும் அளித்துள்ளார்கள்.

இரண்டாவது திட்டத்திற்கு சுமார் 80 கோடி ரூபாய் அயல் நாடுகளின் மூலம் கடன் நமக்குத் தேவைப்படுகின்றது என்று வரையறுக்கப்பட்டது. ஆனல், திட்டம் மூன்ருவது ஆண்டு கட்டத்தில் நிற்கும்பொழுதே சுமார் 1100 கோடி ரூபாய்க்கு அயல் நாடுகள் மூலம் கடன் பெற்றுக் கொள்ள வசதிவேண்டும்போலிருக்கிறது. மிச்சமுள்ள இரண்டாண்டு காலத்தில் மேலும் 300 கோடி ரூபாய் அயல்நாடுகள் கடனகத் தரும் எனும் நம்பிக்கை இருக்கிறது.

1959—ம் ஆண்டு ஜனவரித் திங்கள் முடிய இரண்டாம் திட்டத்திற்காகத் தேடியுள்ள அயல் நாட்டுக் கடன்களின் விபரம் பின் வருமாறு:

அந்நியச் செலாவணியில் திருப்பித் தருவதாக 531·55, கோடி. ரூபாயாக திருப்பித் தருவதாக 388·15 கோடி. நன்கொடை உதவி 100.59 கோடி. ஐ. எம். எப். மூலமாக 95·00 கோடி. ஆக கூடுதல் 1113·29 கோடி.

மேற்கண்டுள்ள 1113 கோடி ரூபாயுடன், முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கடனகப் பெற்று பயன்படுத்தாமலுள்ள 193 கோடி ரூபாயும் சேர்த்துக் கொண்டால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்ருவது ஆண்டு காலத்திலேயே 1306 கோடி ரூபாய் இந்தியா அயல் நாடுகளில் கடன் பெற

சி. ஜம்பு

வாய்ப்புகளைத் தேடியுள்ளது என்ற உண்மை தெரியவரும். 1959, மார்ச் திங்கள் முடிய சுமார் 700 கோடி ரூபாய் இத்தொகையில் பயன்படுத்தப் பட்டுள்ளது.

அந்நிய செலவாணி இன்றைக்குக் கொஞ்சங்கூட இல்லாத அவல நிலையில் மிச்சமுள்ள கடன் தொகை முழுவதும் எளிதில் செலவாகும் என்பதில் இரு கருத்துக்கள் இருக்க நியாயமில்லை.

இரண்டாவது திட்டம் நீட்டிய காலத்தில் கடனகப் பெற முடிவு செய்த தொகை 800 கோடி ரூபாயாகும். மூன்ருண்டு காலத்திலேயே அந்நிய நாடுகளில் பல்வேறு முறைகளில், வழிகளில் கடனகப் பெற வசதி தேடிய தொகை 1300 கோடி ரூபாயாகும். இன்னும் இரண்டாண்டு காலத்தில் சுமார் 300 கோடி ரூபாய் கடன் கிடைக்கும் என நம்பப்படுகின்றது!

திட்டத்தின் கூடுதல் செலவு 4800 கோடி ரூபாயாக வரையறுக்கப்பட்ட காலத்தில் 800 கோடி ரூபாய்தான் கடனுதவி என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனல், திட்டத்தின் முக்கிய நோக்கு நிறைவேறினல் சரி என்று பேசப்பட்டு, திட்டச் செலவு 4500 கோடி ரூபாயாக குறுக்கப்பட்டதற்குப் பின்னல் கடனுதவி சுமார் 1600 கோடி ரூபாயாகும் என்ருல் திட்டத்தின் அலங்கோலமும், ஆளவந்தார்களின் ஆட்சித் திறனும், வரப்போகும் ஆபத்தும் நம்மையெல்லாம் நடுங்க வைக்கின்றன.

இந்த அபாய நிலைமைகளைச் சுட்டிக் காட்டி, அயல் நாடுகளிடம் அதிகமாகக் கடன் வாங்குவது தீதானது என்று விளக்குகின்ற நேரத்தில் பொருள் வளத்தில் முன்னேறியுள்ள நாடுகள் எல்லாம் அயல் நாட்டுக் கடனுதவியைப் பெருமல் மேம்பாடுறவில்லை என்று பொதுவாகக் காரணம் சொல்லப்பட்டு, இந்தியா அடைகின்ற கடனுதவிகள் நியாயமாக்கப்படுகின்றன!

தனது நிதிநிலைமை தாங்கிக் கொள்ளுகின்ற அளவிலும், திருப்பித் தருகின்ற ஆற்றலுக்கேற்பவுமே ஒரு நாடு அயல் நாடுகளில் கடன் பெறும். இந்தப் பொதுவிதியை வைத்து இந்தியா பெற்றுள்ள கடன்களை ஆராய்ந்தால் இந்தியா சுமார் 1600 கோடி ரூபாய் அளவில் கடன் பெறுவது தன் சக்திக்கு மீறியது என்பதை எல்லோருமே ஒப்புவர்.

அத்துடன், இரண்டாம் திட்டம் நிறைவேற பற்ருக்குறை நிதிக் கொள்கை மூலம்—நாசிக் அச்சகத்தில் வெறும் நோட்டுகள் அச்சடிப்பதின் வழியாக 1200 கோடி ரூபாய் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கடனுதவி ஒரு பக்கம், பற்ருக்குறை நிதிக் கொள்கை இன்னொரு பக்கம்! இவ்விரண்டிலும் பொது மக்களின் நிகழ்கால வாழ்வு பலியிடப்பட்டு, வருங்கால வாழ்வை மயானப் பாதைக்கு இட்டுச் செல்லும் கொடுமைதான் தாண்டவமாடுகிறது தற்சமயம் என்ருல் அதில் தவறில்லை.

வாங்கப்பட்டுள்ள அயல் நாட்டுக் கடன்களை வட்டி சேர்த்துத் தந்தாகவேண்டும். வட்டித் தொகை மட்டில் ஆண்டொன்றுக்கு 60 கோடி ரூபாய் வரும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிதாபகரமான பொருளாதார நிலையில், இந்தியாவின் கடனைத் திருப்பிக் கொடுக்கும் சக்தியும் சிரம நிலையிலேயே உள்ளது.

1904-ம் ஆண்டில் நிகழ்ந்த ரஷ்யா-ஜப்பான் போரின்போது, ஜப்பானுக்கு அயல் நாடுகளில் நிறையக் கடன்கள் ஏற்பட்டன. ஆனல் 1914–18-ல் நடைபெற்ற முதல் உலகப் போரினல் ஏற்றுமதி நான்கு மடங்காகி, ஜப்பான் தனது கடன்களை எளிதில் தீர்க்க வாய்ப்பு ஏற்பட்டது. இந்தியா கடன்களைத் திருப்பித்தர இப்படிப்பட்ட விரும்பத்தக்க உலக நிலைமையை சாதகமாக மனதில் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. அப்படிப்பட்ட யுத்த நிலைமையும் வரப்போவதில்லை. வந்தாலும், இந்தியா பாதகமுற்ருல் வியப்பில்லை.

இரண்டாவது உலகப் போரில் ஈரான் நாடு நிறையக் கடன் வாங்கியது. ஆனல் உலகில் பெருமதிப்புள்ள தன்னுடைய மண்ணெண்ணெய் வளத்தால் கடனை த திருப்பியளிக்கும் சக்தி அந்நாட்டிற்கு இருந்தது. இப்படிப்பட்ட இயற்கை வாய்ப்பும் பெருமளவில் இந்தியாவில் இல்லை.

எனவே, இன்றைய பொருளாதார வாய்ப்புகளுக்கு அப்பாற்பட்ட நிலைமைகளை கருதிப் பார்ப்பினும் இந்தியா தன்னுடைய கடனைத் திருப்பித்தரும் சாதகங்கள், அனுகூலங்கள் தென்படவில்லை. ஆக, இன்றைய பொருளாதார நிலைமைகளுக்குட்பட்டுத்தான் இந்தியா தன்னுடைய கடன்களைத் தீர்க்க வேண்டும்.

வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், தேயிலை, சணல், துணி ஆகியவைகளின் ஏற்றுமதி குறைந்து கொண்டிருக்கும் இந்நேரத்தில், ஏற்றுமதி வரிகள் உயர்த்தப்படுகின்ற இத்தருணத்தில், விலைவாசிகள் விஷம்போல் ஏறிக் கொண்டிருக்கும் தற்சமயத்தில் அயல் நாட்டுக் கடன்களை தீர்ப்பது என்பது மேலும் பல துன்பங்களை வரவழைத்துக் கொள்ளுவதற்கு வழி கோலும்.

கண் விற்று சித்திரம் வாங்குவதைப் போல கடன் வாங்கிக் காரியங்கள் நிகழ்த்திஞர்கள். விளைவு கொடுமையாயிருக்கிறது.

இந்தக் கொடுமையை தென்னுட்டு உணர்வோடு எண்ணிப் பார்த்தால் மேலும் திகைக்க வைக்கும். வாங்கியுள்ள கடன் தொகைகளை கீழ் வருமாறு செலவழித்துள்ளார்கள்.

செலவழிக்கப்பட்ட துறை விபரம்.	கோடிரூபாயில்
இரும்பு, எஃகு	261 55
இரயில் துறைக்கு	117·99
நீர்ப்பாசனம், மின்சாரம்	39 99
துறைமுகங்கள்	20·48
தொழில் வளர்ச்சிக்காக	117·54
மேற் கண்டவைகளுக்கு கடனுதவி	694·36
கோதுமை	106·02
வேறு சில்லரை இனங்கள்	12·76
கூடுதல்	1370·30

இங்கே தரப்பட்டுள்ள விபரத்தை ஆராய்ந்தால், அயல் நாடுகளில் கடனகப் பெறப்பட்டு செலவழிக்கப்பட்ட தொகையில் பெரும்பாகம் வடநாட்டிற்கே செலவாகியுள்ளது என்பதை எளிதில் அறியலாம்.

என்வே கடன் பெற்று வடநாடு செழிக்கின்றது ஆனல் கடனைத் திருப்பிக் கொடுக்கும் சிரமத்தில் தென்னுட்டிற்கும் முழுப் பங்குண்டு. திட்டமோ திண்டாட்ட நிலையில், தீமை தருவதாக உள்ளது. அதன் தீதான விளைவுகளைத் திராவிடம் சுமக்க நேரிடுகின்றது. இந்நிலை மாறி, ஒழுங்கான திட்டம் நல்ல அடிப்படையில் உருவாகுவது எல்லோருக்கும் நல்லதாகும்.

கலப்படம்

புலியாளப் பிறந்தோரே! பொருளாதாரம் வீசை என்ன விலை?

மேல்நாட்டில் ஆயிரம் ஐன்ஸ்டின் போன்ற விஞ்ஞானிகள் இருந்தென்ன; போயென்ன? எங்கள் நாட்டு யக்ஞவல்கியர் போன்ற ஒரு தத்துவ ஞானிக்கு ஈடாகுமா? (தத்துவஞானி, என்று சாதாரணமாக சொல்லக்கூடாது: தத்துவ-க்-ஞானி என்று அழுத்திச் சொல்லவேண்டும்.) அதே போல் மேல்நாட்டில் காரல் மார்க்ஸ் போன்ற அரசியல் பொருளாதார மேதை இருந்தென்ன; போயென்ன? எங்கள் சென்னை மாநிலத்து முதலமைச்சருக்கு (காமராசருக்கு) ஈடாகுமா? காரல்மார்க்ஸ் எங்கே? காமராசர் எங்கே? — என்று கேள்வி எழுப்புவோரே, கேலிபுரிவோரே—இதோ அடுக்கடுக்காக வைக்கிறோம், அவரது அறிவு ததும்பும் உரைகளை! உரைநடையில் சொன்னால் உங்களுக்குப் புரியாமலிருக்கலாம், ஆகவே காமராசரையும், காரல்மார்க்சையும் சந்திக்கவிடுவோம். யார் வெல்வார், யார் வெருண்டு ஓடுவார் என்பதைப் பாருங்கள்:

காரல்மார்க்ஸ்: வணக்கம், சென்னை மாநில முதலமைச்சரே!

காமராசர்: நமஸ்தே! ஜெய் ஹிந்த்!

காரல்: ஜெய்ஹிந்த் — என்பது உங்கள் காங்கிரஸ் போராட்டத் திட்டத்தை எதிர்த்த நேதாஜியின் சுதந்திரப் போர் முழக்கம்—என்றல்லவா படித்திருக்கிறேன்.

காம: அதனால் என்ன? எதிர்த்தவர்களையெல்லாம் எங்கள் பக்கம் எப்படியாவது இழுப்பதுதானே எங்கள் பெருமை. இந்தப் பெருமையில் எங்களுடைய வெற்றியின் ரகசியம் கூட அடங்கிக் கிடக்கிறது.

காரல்: என்ன?

காம: ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்? நீங்கள் உங்கள் எதிரிகளை ஒழித்தே உங்கள் இலட்சியத்தை அடைய வழிவகுத்தீர்கள். நாங்கள் அப்படியில்லை. —முன்னாள் எதிரிகளை வயிற்றுக்குள் அனுப்பி ஜீரணம் செய்து விடுவதுதான் பெரும்பாலும் எங்கள் வழக்கம். உதாரணமாக ராஜாசர் போன்றவர்கள் முன்பு காங்கிரசின் எதிரிகள். இப்போது காங்கிரஸ் மாளிகையைத் தாங்கும் தங்கத் தூண்கள்.

காரல்: ....ஆ....இது பாஸிசம்!

காம: —இது பாஸிசம் இல்லீங்க; 'பொலட்டிகல் பேஷன்' —அரசியல் நாகரீகம். அத்தனை ஏன்; எங்கள் மந்திரிகளில் ஒருவரே காங்கிரசை முன்பெல்லாம் கடுமையாக எதிர்த்தவர்தான்.

காரல்: உங்கள் ஆட்சி நெடுநாள் நில்லாது.

காம: யார் சொன்னது? சுதந்திரம் வாங்கியதிலிருந்து நாங்கள்தான் பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கிறோம். உங்கள் ராஜதந்திரம், சூழ்ச்சியைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு ராஜதந்திரம் சூழ்ச்சி எங்களிடம் உண்டு. ஒரு தடவை எதிர்க்கட்சி மந்திரிசபை அமைப்பதுபோல இம்மாநில நிலைமை இருந்தது. உடனே நாங்கள் ஓடினோம், ராஜாஜியிடம்! அவரைப் பார்க்க விரும்பாத முகமெல்லாம் அவரைப் பார்த்தன. கேட்டோம், கெஞ்சினோம், 'ஆபத்திலிருந்து காப்பாற்று ஐயனே!'—என்று! புகழ்ச் சொல்லுக்கு மயங்காத மனிதனுண்டா? வந்தார், ராஜாஜி. கொல்லைபுற வழியாக! காங்கிரஸ் மந்திரிசபை அமைந்தது! இத்தனை ஏன், பக்கத்தில் கேரளாவில் உங்கள் பெயரைச் சொல்லிக் கொண்டு சிலபேர்—கம்யூனிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தார்கள். விட்டோமா? ஒரே சத்தியாக்கிரகம்....

காரல்: சத்தியாக்கிரகம் என்றால்....

காம: சத்தியத்தைக் கடைப்பிடித்தல். அப்படிச் சொன்னால் உங்களுக்குப் புரியாது. தண்டவாளங்களைப் பெயர்ப்பது, தந்திக் கம்பிகளை அறுப்பது, பள்ளிக்கூடத்திலே கல்லைப் போடுவது, கொலை செய்வது....

காரல்: ஐயோ. இது அகிம்சைக்கு விரோதம் ஆயிற்றே....

காம: இருந்தால் என்ன; நாம் எதிர்ப்பது அகிம்சையின் விரோதிகளைத்தானே?......அந்தப் போராட்டத்தில் கம்யூனிஸ்ட் சர்க்கார் கவிழ்ந்தது! இதற்குத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிலிருந்து நிறைய உதவி செய்தோம்....நம்முடைய இன்னொரு அருமையான அரசியல் கொள்கை—கெஞ்சினால் மிஞ்சுவது; மிஞ்சினால் கெஞ்சுவது!

காரல்: இதற்கென்ன பொருள்?

காம: அடடே.............உங்களுக்கென்ன அரசியலே சுத்தமாத் தெரியவில்லையே...

காரல்: உங்கள் அரசியல் தெரியாது!

காம: தெரியாமற் போனால் தெரிந்து கொள்ளுங்கள். கெஞ்சினால் மிஞ்சுவது—என்பது எதிர்க்கட்சிகள் ஜனநாயகத்தின் கட்டுக்கோப்புக்கு அடங்கி நடக்கும்போது, 'கன்னாபின்னா'—என்று திட்டித் தீர்ப்பது. 'பிச்சைக்காரர்களே! கூத்தாடிகளே! குடுகுடுப்பைக்காரர்களே! பைத்தியங்களே!' —என்று! அதற்கும் மீறி அவர்கள் வளர்ந்தால் துப்பாக்கியால் சுட்டுத் தீர்ப்பது. அதற்கு மீறி அவர்கள் வளர்ந்தால் 'ஒரு பத்தாண்டுக்கு உங்கள் பிரச்சாரத்தை நிறுத்தி வையுங்கள்'—என்று கெஞ்சுவது. இதுதான் கெஞ்சினால் மிஞ்சுவது; மிஞ்சினால் கெஞ்சுவது!

காரல்: நன்றாக இருக்கிறது. நாக்கில் இந்தச் சொல் உலவும்போது! செயலாக நாட்டில் இது உலவ ஆரம்பித்தால்....

காம: என்ன இதற்கே மலைக்கிறீர்கள்? இன்னும் இருக்கிறது. உங்கள் பெயரில் காலம் கடத்தும் கம்யூனிஸ்டுகளைச் சிலபேர் குழப்பவாதிகள் என்கிறார்கள். அவர்களைவிட நாங்கள்தான் மக்களை அதிகமாகக் குழப்புவோம். அரசாங்கத்தில் குழப்பமிருந்தால் மக்கள் அமைதியடைவார்கள். மக்களிடையே குழப்பமிருந்தால் அரசாங்கம் நிம்மதியாக இருக்கும். அதனால்தான் நாங்கள் எப்போதும் மக்களைக் குழப்பிக் கொண்டே இருப்போம்.

காரல்: எப்படி?

காம: ஒரு அமைச்சர் போவார். 'கதர்தான் நல்லது' என்பார். இன்னொரு அமைச்சர் மில்லுக்குப் போவார். 'மில் துணி உயர்ந்தது' என்பார். ஒருவர் 'கனரகத் தொழில் வேண்டும்' என்பார். இன்னொருவர் 'கனரக இயந்திரத் தொழில் நாட்டைப் பிடித்த சனி'—என்பார். ஒரு அமைச்சர் 'கூட்டுறவுப் பண்ணை முறை வெற்றியடைந்து விட்டது'—என்பார். இன்னொருவர் 'அது படுதோல்வி அடைந்து விட்டது!' என்பார். எங்கள் மந்திரிகளிலேயே இந்தக் கலையில் சிறந்த ஒருவர் இருக்கிறார். மக்களைக் குழப்புவதற்கென்றே 'அவரை குழப்பத் துறை அமைச்ச'ராகப் போடுவது என்றிருக்கிறோம்.

காரல்: ஹி...ஹி....

காம: என்ன சிரிக்கிறீர்கள். இது அரசியல்வாதிகள் சிரிக்கக்கூடிய விஷயமல்ல. அவர் பேசுவதைக் கேட்டால் நீங்கள்கூட அசந்து போய்விடுவீர்கள். ஒரு வேளை நீங்கள் அழுதாலும் அழலாம்.

காரல்: அப்படியா?

காம: இப்போதுகூட ஒன்று சொன்னார் பாருங்கள். 'ரஷ்யப் பிரதமர் ஐஸன்ஹோவர், ரூஸ்வெல்ட்டை சந்தித்தார்' —என்றார்.

காரல்: ஹி......ஹி.....இரண்டு பேரும் அமெரிக்கர்கள்தானே?

காம; உண்மை அது. ஆனால் குழப்புவதற்குத் தானே இதையெல்லாம் கூறுவது?

காரல்: இது மாபெரும் தவறு. இச் சதி வேலையை யாராவது மக்களுக்கு எடுத்துக் காட்டினால், பொங்கும் மக்கள் கடலிலே குமிழிகளாகி அழிவீர்கள்!

காம: அதுதானே முடியாது. அதற்குத்தான் பெரியாரு இருக்கிறாரே!

காரல்: பெரிய ஆரு?

காம: ஆமாம்; காங்கிரசை அழிக்கும் பெரிய காட்டாறு போலதான் வந்துகிட்டிருந்தாரு மனுஷன். இப்போ தேங்கிப் போயிட்டாரு.

காரல்: ஏன்?

காம: எதிர்ப்பையெல்லாம் தேக்க! எதிரடி தர!

காரல்: ஏன் மாறினார்?

காம: அவர் கூட இருந்த சிலர் இப்போது பெரிய கட்சியாக வளர்ந்து விட்டாங்க. பெரிய எதிர்க்கட்சியாக இருந்து ஆட்சி பீடத்தையே கலக்கிகிட்டு இருக்கிறாங்க.

காரல்: அதற்கு அவர் பெருமைப்பட வேண்டியதுதானே.

காம: அவர் பெருமைப் பட்டால் நாங்கள் சிறுமைப்பட வேண்டுமே! எப்படியோ நாங்கள் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிக்கொண்டு கைவிடாமல் இருக்கிறோம். இதுதான் எங்கள் அரசியல்! பொருளாதாரத்தைப் பற்றிக் கேட்கவில்லையே?....என்ன சோர்ந்து உட்காருகிறீர்கள்? அதிகமாக பொருளாதாரத்தைப் பற்றிச் சொல்லவில்லை. ஒரே ஒரு உதாரணம். இப்போது தமிழ் நாட்டில் புளி விலை திடீரென் அதிகமாயிட்டுது. காரணம்....

காரல்: திடீரென விலை ஏறிற்றென்றால் அதற்குக் காரணம், சரக்குகளை கொள்ளை இலாபக்காரர்கள் பதுக்கிக்கொண்டிருப்பார்கள்.

காம: அதுதான் தப்பு. நான் அப்படிச் சொல்லவில்லை. முன்பெல்லாம் வீடுகளில் புளியஞ்செடி நட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது இல்லை. அதனால்தான் புளி விலையேற்றமாகிவிட்டது — என்று ஒரு போடு போட்டேன். எப்படி என் பொருளாதார அறிவு?

காரல்: ஐயா பொருளாதார மேதையே! முன்பு புளியஞ்செடி வைத்திருந்தால் இப்போது பலன் தரும், இப்போது செடி வைத்தால் வருங்காலத்தில்தானய்யா பலன் தரும்.

காம: இதைப்பற்றி நமக்கென்ன கவலை? யோசித்துப் பேசுபவனல்ல பொருளாதாரவாதி! அவனுக்கு எங்கள் கட்சியில் இடம் கிடையாது.

காரல்: ஆமாம்; மிளகாய் விலை அதிகமானதற்கும் இதுதான் காரணமா?

காம: ஆமாம். ஒவ்வொரு வீட்டிலும் மிளகாய் செடி வைத்தால் இந்தக் கஷ்டம் இருக்காதே...

காரல்: அரிசி விலை அதிகமானதற்கு என்ன காரணமோ?

காம: ஒவ்வொரு வீட்டிலும் அரிசிச் செடி வளர்த்தால் இந்தக் கஷ்டம் வராதே?

காரல்: குழந்தைப் பிறப்பு ஒரு நாளைக்கு 13,700 அதிகமானதற்கு என்ன காரணம்?

காம: ஒவ்வொரு வீட்டிலும் குழந்தைச் செடி வளர்த்தால் அந்தக் கஷ்டம் வராதே!

காரல்: (மயக்கம்) ஐயா உங்களுக்கு ஒரு கும்பிடு! உங்கள் பொருளாதாரத்திற்கு கும்பிடு —என்னை விட்டால் போதும் ...(ஓடுகிறார்!)

காம: இருங்க....பொருளாதாரப் பாடம் இன்னும் இருக்கிறது!

உரிமை பெறுவோம்!

திரைஉலகில் நிமிடத்திற்கு நிமிடம் போராட்டம் நடைபெறுகிறது. இதுவரை யார் யாரோ வெற்றி பெற்றிருக்கிருர்கள். வீழ்ந்த பெருமைக் கொடியை உயர்த்திப் பிடித்திருக்கிருர்கள். என்ருலும், என்றென்றும் வீழ்ந்துபட்ட புருவாக, தாழ்ந்து போன கொடிச் சீலையாக இருப்பது திரைப்படத் தொழிற் கலைஞர்களே! டெக்னீஷியன்ஸ்—என்று அழகாக ஆங்கிலத்திலே அழைத்தாலும், அவர்கள் புகழ் பரவுவதில்லை, மற்றையோரைப் போல!

நடிகர்களுக்கு இருக்க வேண்டிய புகழ் இருக்கிறது, நாட்டிலே! புகழ் வருவாயோடு பண வருவாயும் அவர்களுக்கு இருக்கிறது! படத் தயாரிப்பாளருக்கு, எது அவர் லட்சியமோ அது அவருக்குக் கிடைக்கிறது!

ஆனல், பரிதாபத்திற்குரிய தொழிற் கலைஞர்களுக்கோ பணமும் கிட்டுவதில்லை; புகழும் கிட்டுவதில்லை. பட்டமெடுக்கும் கொட்டகையில் மாத்திரம் அவர்களின் பேச்சு—எதிர்ப்புச் சொல்வோர் யாரும் இல்லாவிட்டால் — எடுபடும்! பயந்து பயந்து கருத்தைச் சொல்வார்கள்; நியாயமான கருத்தாக இருக்கும். அதை ஏற்பார் எவரும் இருக்க மாட்டார்கள். ஏனெனில், இவர்கள் பணத்திலும் ஏழைகள்; புகழிலும் ஏழைகள்! ஏழை சொல்லுக்கு அம்பலத்தில் மதிப்பேது?

தொழிற் கலைஞர்களின் கருத்துக்கள் படத்தின் வெற்றியை நோக்கியவையாக இருக்கும். அதே நேரத்தில் அந்தக் கருத்துகள், கேமிராவிற்கு முன் நிற்கும் நடிகர்களையும், அவர்களைப் பார்த்த வண்ணம் சாய்ந்து உட்கார்ந்திருக்கும் தயாரிப்பாளர்களையும் பாதிக்கின்றவையாகதான் இருக்கும்!

நம்முடைய தொழிற் கலைஞர்களின் சாதனைகள் வியக்கக்கூடியவை. மேல்நாடுகளை ஒப்பிடும் போது 'கூட்டாஞ் சோறு ஆக்கும் குழந்தை'களின் கருவிகளைப் போல் இயந்திர வசதிகளை வைத்துக்கொண்டு இத்தனை நுணுக்கத்தோடு பணியாற்றியிருக்கிருர்கள், நம்மவர் — எனும் போது மெத்தப் பெருமைப்படுகிறேம்.

அதே நேரத்தில் அவர்களுக்கிருக்கவேண்டிய வாய்ப்பும், வசதியும், மக்களிடையே செல்வாக்கும் இல்லாதது கண்டு வருத்தப்படுகிறேம்.

இதற்குப் பல கோணங்களிலிருந்து பல காரணங்கள் காட்டினலும், தொழிற் கலைஞர்கள் இப்படித் தாழ்வு நிலையில் இருப்பதற்கு முதல் காரணம் அவர்களே தான்!

ஆம்; தொழிற் கலைஞர்களே! தங்களைத் தாங்களே உயர்த்திக் கொள்கிற பண்பு உங்களுக்கு வேண்டும். திறமையைக் காட்டி அதற்கேற்ற ஊதியத்தைப் பெறுவதில் பிடிவாதம் காட்டவேண்டும். மங்கிப் போயிருந்த கதாசிரியர்களின் மதிப்பு சில 'பிடிவாதக்காரர்க'ளால் உயர்ந்தது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!

இத்தனைக்கும் மேலாக மக்களிடையே பழகும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். காசை வீசுகிற பக்கத்திலே ஓடிப் போய் பணி புரியும் பழக்கத்தைத் தள்ளி மிதிக்கவேண்டும். உங்கள் கருத்துக்களைச் செயலாக்கும் இடத்தைத் தேர்ந்தெடுத்துப் பணி புரியவேண்டும்.

மக்கள் உங்கள் எண்ணங்களை, திறமையைப் புரிந்துகொள்ளும் நிலைக்கு நீங்களே அவர்களை உயர்த்தவேண்டும். தொழில் நுணுக்கங்களை, வரட்சி தோன்ருது சுவையோடு மக்கள் கூட்டத்திலே எடுத்துச் சொல்ல வேண்டும்; எழுதவேண்டும்!

மக்களின் 'தொழில் நுணுக்க ரசிப்பு' வளர்ந்து, 'அவர் செய்தால் நன்ருக இருக்கும்!' 'இவர் செய்தால் இன்னும் நன்ருக இருக்கும்!'என்று எப்போது கூறுகிருர்களோ, அப்போது இன்றைய 'இருட்டு நிலை' மாறும்! ∴

புகழ் ஏணி...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

விழா முடிந்தது. மக்கள் கடல் வெளியேறியது.

காலியாகக் கிடக்கும் அந்தத் தியேட்டரில் யாரோ ஒருவர் மட்டும் உட்கார்ந்திருக்கக் கண்டான், சந்திரன்.

அவனையும் அறியாத ஆர்வம் அவனை அந்தப் பக்கம் இழுத்தது. சந்திரன் அருகே சென்ருன். உட்கார்ந்திருந்தது வேறு யாருமல்ல; ராமுதான்!

"அண்ணு!"—என்ருன்.

அவர் பதில் பேசவில்லை. ஏனெனில் அவர் இறந்து பல விஞடிகள் ஆகியிருந்தன!

ராமுவின் முகத்தில் இன்னமும் சிரிப்பு தவழ்ந்து கொண்டிருந்தது. ஒருவேளை அது சந்திரனுக்கு புது வாழ்வை ஆரம்பித்து வைத்த ஆனந்தமாக இருக்கலாம்! ∴

ELEGANT

ஆசிரியரும் அச்சிடுபவரும்; வெளியிடுபவரும், மு. கருணநிதி, 'முரசொலி' அச்சகம், 4—128, மவுண்ட்ரோடு, சென்னை—6. தமிழ்நாடு